புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | நவம். 03, 2011 | புரட்சி 10 | முழக்கம் 42 | விலை: ரூ.2.50

## தொழிலதிபர்களிடம் சரணடைந்த மன்மோகன் ஆட்சி

# தனியார் துறை இடஒதுக்கீட்டின் கதி என்ன?

*தனியார் துறையில் இடஒதுக்கீடு கொண்டு வருவதாக உறுதி தந்த மத்திய ஆட்சி - தொழிலதிபர்களின் மிரட்டலுக்கு பணிந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது.*

அரசுத் துறைகள் தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. எனவே அரசுத் துறைகளில் வழங்கப் பட்டுவரும் இடஒதுக்கீடுகள் செயலிழந்து நிற்கின்றன. பெரியார் திராவிடர் கழகம், 'சம்பூகன் சமூக நீதிப் பயணங்களை' நடத்தி தமிழகம் முழுதும் தனியார் துறை இடஒதுக்கீடு உரிமைகளை மக்களிடம் விளக்கியது. அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, தனியார் துறையில் இடஒதுக்கீடு வழங்குவதாக தந்த உறுதியை கிடப்பில் போட்டுவிட்டது என்றே கூற வேண்டும். 2004 ஆம் ஆண்டு அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்தவுடன் முன் வைத்த குறைந்த பட்ச பொது செயல் திட்டத்தில் தனியார் துறை இடஒதுக்கீட்டை முன் வைத்தது. இது பற்றி பரிசீலிக்க அமைச்சரவை குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்தக் குழு தொழிலதிபர்களுடன் விவாதித்து பட்டியலினத்தவருக்கும், பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு செய்ய வலியுறுத்தியது. எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

2006 ஆம் ஆண்டில் இதே பிரச்சினைக்காக பிரதமர் அலுவலகத்தில் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. மீண்டும் அரசின் தொழில் மற்றும் மேம்பாட்டுத் துறையின் கீழ் 2008 ஆம் ஆண்டு தொழிற்துறை செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. குழுக்கள்தான் வந்தன. விளைவு ஏதுமில்லை. 2006 இல் இந்திய தொழிலதிபர் சம்மேளனம் மற்றும் வர்த்தக சபை இணையம் இணைந்து தனியார் தொழில் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு வாய்ப்பு அளிக்கும் திட்டம் ஒன்றை உருவாக்கின. அதாவது 10 பல்கலைக்கழகங்களிலிருந்து 1000 பட்டியலின மற்றும் பழங்குடி மாணவர்களைத் தேர்வு செய்து சிறப்புப் பயிற்சி தருவது; 100 பேருக்கு தொழிற் துறை தொடர்பாக பயிற்சியளிப்பது; 500 பேருக்கு தனிப்பயிற்சியளித்து அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். போன்ற அகில இந்திய தேர்வுக்கு பயிற்சி தருவது; அய்.அய்.டி., அய்.அய்.எம். போன்ற உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் படிக்கும் பட்டியலின பழங்குடி மாணவர்கள் 50 பேருக்கு உதவித் தொகை வழங்குவது; வெளிநாடுகளில் படிக்கும் இதே பிரிவு மாணவர்கள் 5 பேருக்கு உதவுவது - இப்படி எல்லாம் திட்டங்கள் தயாரிக்கப் பட்டன. தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு தனியார் துறையில் பங்கேற்பதற்கான "தகுதி" இல்லை என்பது போலவும், அதற்காக அவர்களை தயார்படுத்துவதாகவுமே இத் திட்டங்கள் இருந்தன. தனியார் பெரும் தொழில் நிறுவனங்களின் பார்ப்பன ஆணவத்தையே இவை வெளிப்படுத்துகின்றன.

பின்னர், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர், 2010 ஜூலையில் தொழிலதிபர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, தாழ்த்தப்பட்ட பழங்குடி மாணவர்களுக்கு 5 சதவீத இடஒதுக்கீடு வழங்குமாறு கேட்டார். அதையும் மறுத்து செப்டம்பர் மாதத்தில் தொழில் நிறுவனங்கள் கடிதம் எழுதி விட்டன. 2009 ஆம் ஆண்டு புதுடில்லி ஜந்தர்மந்தரில் தனியார் துறை இடஒதுக்கீட்டை வலியுறுத்தி சாகும்வரை பட்டினிப் போராட்டத்தை தாழ்த்தப்பட்டோர் மற்று பழங்குடியினர் அமைப்புகளின் கூட்டமைப்புத் தலைவர் உதித்ராஜ் தொடங்கினார். அதைத் தொடர்ந்து 2009 டிசம்பர் 16 இல் சமூகநலத் துறை இணைச் செயலாளர், இந்த பட்டினிப் போராட்டத்தை சுட்டிக்காட்டி, மீண்டும் தொழிலதிபர்களுக்கு கடிதம் எழுதினார். எதுவும் நடக்கவில்லை.

தனியார் துறை இடஒதுக்கீட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் அமைப்புகளுக்கான அகில இந்திய கூட்டமைப்பு என்ற அமைப்பு அதன் தேசிய தலைவர் உதித்ராஜ் தலைமையில் பேரணிகளையும் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டங்களையும் நடத்தி வருகிறது. எதிர்வரும் நவம்பர் 28 ஆம் தேதியும் புதுடில்லி ராம் லீலா மைதானத்திலிருந்து புறப்பட்டு, நாடாளுமன்றத்தை முற்றுகையிடும் போராட்டத்தை, அந்த அமைப்பு அறிவித்துள்ளது. இந்த அமைப்பின் தலைவர் உதித்ராஜ் வருமான வரித்துறை ஆணையாளர் என்ற உயர்பதவியிலிருந்து விலகி இந்த உரிமைப் போராட்டங்களை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திரா கொலை பற்றி காங்கிரஸ் ஏட்டின் செய்தி:

# உடனடி சிகிச்சையை தடுத்தது ஏன்?

இந்திராவின் மரணம் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட தாக்கர் ஆணையத்தின் பரிந்துரையை வெளியிட ராஜிவ் காந்தி மறுத்து விட்டார். இதற்காக நாடாளுமன்ற சட்டத்தையே திருத்தினார். இந்திரா கொலை செய்யப்பட்டவுடன் உடனடியாக அவருக்கு மருத்துவ உதவிகள் செய்யப்படாதது ஏன் என்ற கேள்வியை பலரும் எழுப்பி வந்தனர். குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த சுதர்சனம் இந்தக் கேள்வியை பலமுறை எழுப்பியுள்ளார். இந்திரா சுடப்பட்ட நாள் 1984, அக். 31. காலை 9.17 மணிக்கு அவர் சுடப்பட்டார். ஆனால் இந்திராவின் வீட்டின் அருகே இருந்த லோகியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லாமல் 4 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 20 நிமிடம் பயணிக்க வேண்டிய அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனைக்குத்தான் அவரை கொண்டு சென்றார்கள். அதனால் குண்டு பாய்ந்து 43 நிமிடங்கள் கழித்து காலை 10 மணிக்கு தான் இந்திராவை மருத்துவமனைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படி ஒரு முடிவை எடுத்தவர் தாக்கர் ஆணையத்தால் விசாரிக்கப்பட வேண்டும் என்று சந்தேகக் கரம் நீட்டப்பட்ட ஆர்.கே.தவான்; இந்த உண்மைகளை இப்போது - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வ ஏடான திரு.கோபண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்ட 'தேசிய முரசு' மாதம் இருமுறை இதழே வெளியிட்டுள்ளது. இந்திராவின் நினைவு நாளையொட்டி அந்த ஏடு, இந்திராகாந்தி பற்றிய ஆங்கில நூலில் வெளியான கட்டுரையை தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளது. நூலின் பெயர் 'Mother Inida' இந்திராவின் அரசியல் வாழ்க்கையை சித்தரிக்கும் இந்த நூலின் ஆசிரியர் பிரணாப் குப்தா. 'தேசிய முரசு' (அக்.16, 2011) இதழிலிருந்து கட்டுரையின் ஒரு பகுதியை இங்கே வெளியிடுகிறோம்.

"இந்திராவின் சப்தர்ஜங் சாலையில் அவசரத் தேவைக்காக 24 மணி நேரமும் தயார் நிலையில் அவசர ஊர்தி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்திரா காந்தி குண்டடிப்பட்டுக் குருதி வழிந்து, எலும்பும் சதையும் தரையில் சிதறி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலையில், அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்ல வேண்டிய அவசர ஊர்தியின் ஓட்டுநரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர் தேநீர் குடிக்கச் சென்றிருப்பார் என்று சிலரும், அவர் பணிக்கே வரவில்லை என்று வேறு சிலரும் கூறினார்கள். அவசர ஊர்தியை எந்த நேரமும் இயக்குவதற்கு வசதியாக அதில் எப்போதும் சாவி பொருத்தப் பட்டிருக்க வேண்டும் என்று விதிமுறை வகுக்கப்பட்டிருந்த போதிலும், அன்று அந்த ஊர்தியில் சாவி பொருத்தப்பட்டிருக்கவில்லை.

சோனியா காந்தியும், ஆர்.கே.தவானும், நாராயண் சிங், நாதுராம், தினேஷ் பட் ஆகியோரின் உதவியுடன் இந்திராவின் உடலைத் தூக்கினார்கள். அருகில் நிறுத்தப்பட்டிருந்த அம்பாசிடர் காருக்கு அவரது உடலைத் தூக்கி வந்தனர். காரின் பின்புறத்தில் இந்திராவை வைத்த சோனியா, அவரது தலையைத் தமது மடியில் வைத்துக் கொண்டார். தவான், பட், மாத்தூர் ஆகியோருடன் இந்திராவின் உதவியாளரான எம்.எல்.பொத்தேதாரும் காரில் ஏறிக் கொண்டார்.

அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனைக்குக் (AIMS) காரை இயக்கும்படி ஆர்.கே.தவான் ஓட்டுநருக்கு ஆணையிட்டார். இந்திராவின் வீட்டிற்கு அருகிலேயே ராம்மனோகர் லோகியா மருத்துவமனை போன்ற மருத்துவ நிலையங்கள் இருந்தன. அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனைக்குச் செல்ல, நெரிசல் இல்லாத நேரத்தில் 20 நிமிடங்கள் ஆகும். எனினும், அங்குதான் இந்திரா காந்தியின் 'ஓ நெகட்டிவ்' குருதியும், அவரது மருத்துவ ஆவணங்களும் இருந்தன என்பதால், அங்கு செல்லும்படி தவான் ஆணையிட்டிருந்தார்.

அதன்படி அம்பாசிடர் கார், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையை நோக்கி விரைந்தது. அன்று வழக்கத்தைவிட அதிகமாக நெரிசல் காணப்பட்டது. பிரதமரின் வீட்டிலிருந்து 4 கி.மீ. தொலைவிலுள்ள அந்த மருத்துவ மனைக்கு இந்திரா கொண்டு செல்லப் பட்டபோது 10 மணி ஆகியிருந்தது"

- என்று அந்த செய்தி கூறுகிறது. உடனடியாக உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் அருகே உள்ள மருத்துவமனைக்குப் போவார்களா? அல்லது மருத்துவ ஆவணங்கள் உள்ள மருத்துவமனையை நோக்கிப் போவார்களா? சோனியா உடன் இருக்கும்போது, தவான் ஏன் இந்த முடிவை எடுத்தார்? முடிவெடுக்க வேண்டிய சோனியா - இதற்கு ஒப்புதல் தந்தாரா? அவசர ஊர்தியின் ஓட்டுனர் எங்கே போனார்? அவசர ஊர்தியில் சாவி இல்லாமல் போனது ஏன்? இந்தக் கேள்விகள் சந்தேகத்தை எழுப்பவே செய்கின்றன. ஆம்! காங்கிரஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தியிலிருந்தே கேட்கிறோம்!

# ‘இராமன்’ எத்தனை ‘இராமன’டி?

*300க்கும் மேற்பட்ட இராமாயணக் கதைகள் இருக்கின்றன என்பதிலிருந்தே இராமாயணம் வரலாறு அல்ல; கற்பனை; பார்ப்பனப் புனைவு என்ற முடிவுக்கு வந்து விடலாம். இந்த உண்மையை பாடமாக வைப்பதற்கே டெல்லி பல்கலையில் பார்ப்பன இந்துத்துவ சக்திகள் எதிர்த்து பாடத்தை நீக்கச் செய்துவிட்டன. பல்வேறு இராமாயணக் கதைகளை இங்கு தொகுத்துத் தந்துள்ளோம். சென்ற இதழ் தொடர்ச்சி:*

**இராமன் குஷ்டரோகி!**

சூத்ரநிபாதம் என்ற புத்தர் அறிவுரைகளைக் கூறும் நூலில் ராமன் ஒரு குஷ்டவியாதி படைத்தவன் என்றும், அதனாலே அவன் நாட்டைவிட்டு துரத்தப் பட்டான் என்றும், அங்கு புத்தர் அறிவுரைகளைக் கேட்டதும் அவனுக்கு குஷ்டம் நீங்கியது என்றும் கூறப்பட்டுள்ளது.

ப்ரியை என்பவனை அவளது சகோதரர்களே திருமணம் செய்து கொண்டதாகவும், சில காலத்தில் அவளுக்கு குஷ்ட வியாதி வர, காட்டுக்கு அனுப்பப்பட்டாள் என்றும், அங்கு இராமன் புத்தர் அறிவுரைகளைக் கூறி அவள் குஷ்டத்தை நீக்கி, அவளையே திருமணம் செய்து கொண்டதாகவும் இதில் கூறப்படுகிறது. (சீதைக்குப் பதில் ப்ரியை இங்கு வருகிறாள்) இந்த பவுத்த இராமாயணத்தில் ராமன் இராட்சதர்களோடு யுத்தம் நடத்தும் கதைகள் எதுவும் இல்லை என்பது கவனிக்கத்தக்கது.

மேலும், வால்மீகி இராமாயணத்திலே புத்தரைப் பற்றிய சான்றுகள் வருகின்றன. இராமனைப் பார்க்க வந்த பரதனிடம் இராமன் கேட்கும்பொழுது பவுத்தன், சார்வாகன் முதலிய நாஸ்திகர்களுடன் பழகாமல் இருக்கிறாயா? புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் பெரியோர்களுடைய சம்பிரதாயப் பரம்பரைப்படி அர்த்தம் செய்யாமல் கேவலம் தர்க்கத்தைப் பிரயோகித்து அவை இகத்திலும் பரத்திலும் பயனற்றவை என்று வாதிப்பவர்கள் பவுத்தர்கள் என்று இராமன் பரதனுக்கு எச்சரிக்கை செய்கிறான். (அயோத்தியா காண்டம் 100வது சருக்கம் 574 ஆவது பக்கம். சி.ஆர். சீனிவாச அய்யங்கார் மொழி பெயர்ப்பு)

இதிலிருந்து இரண்டு விவரங்கள் தெரிகின்றன. வால்மீகி இராமாயணத்துக்கு முன்பே பவுத்த இராமாயணக் கதை நிலவி வந்தது என்பது ஒன்று. மற்றது, பவுத்த இராமாயணத்தில் இல்லாத இராம-இராவண யுத்தம், திராவிடர்களை இழிவுபடுத்துவதாக பின்னால் திட்டமிட்டு சேர்க்கப்பட்டுள்ளது என்பது மற்றொன்று.

**இலியட்டின் ‘காப்பி’**

கிரேக்க நாட்டில் ஹோமர் இயற்றிய இலியட் என்ற காவியத்தை ஒட்டியே அலெக்சாண்டருடைய காலத்துக்குப் பிறகு வால்மீகி இராமாயணத்தை எழுதினார் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. அந்த இலியட் காவியத்துக்கும் வால்மீகி இராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமைகள் இங்கே பார்ப்போம்.

1) இராமாயணத்தில் சீதை வருவதைப்போல் ஹெலன் என்பவள் வருகிறாள். இருவரும் சிறந்த அழகிகளாக வருணிக்கப்படுகின்றனர்.

2) இவர்கள் இருவரையும் வேறு ஒருவன் வீட்டிலே வைத்திருந்ததாலேயே யுத்தம் வருகிறது. சீதையைத் தூக்கிச் செல்வது இராவணன். ஹெலனை அழைத்துச் செல்வது பாரிசல் என்பவன்.

3) இவர்கள் இருவரையும் அவர்களுடைய கணவர்கள் மறுபடியும் மீட்டு வந்து இல்லறம் நடத்துகிறார்கள். இராமாயணத்தில் இராமன்; இதிலே மெனலேயஸ் என்பவன்.

4) இரண்டிலும் முக்கிய கதாநாயகர்கள் இரண்டு சகோதரர்கள். இரண்டு காவியத்திலும் மற்ற அரசர்களின் துணையுடன் எதிரியைத் தோற்கடிக்கிறார்கள்.

5) இரண்டிலும் எதிரிகள் நகரம் முற்றுகையிட்டுத் தீ வைக்கப்பட்டது.

6) இரண்டிலும் யுத்தம் நடக்கும் முன், பெண்ணைத் திருப்பித்தர தூது அனுப்பப்பட்டது.

7) இராமனுக்குக் குரங்குகள் உதவியதைப்போல், இந்தக் காவியத்தில் குதிரைகள் உதவுகின்றன.

**கிறிஸ்தவ இராமாயணம்**

கிறிஸ்தவ இராமாயணத்துக்கும் வால்மீகி இராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமைகள் வருமாறு:

1) கிறிஸ்தவ இராமாயணத்தில் தசரதனுக்குப் பதிலாக டேவிட் என்ற அரசனும் இராமனுக்குப் பதிலாக சாலோமன் என்ற சக்கரவர்த்தியும் வருகிறார்கள்.

2) இராட்சதர்கள் மனிதர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்தார்கள் என்று வால்மீகி, கம்பராமாயணத்தில் கூறப்படுவது போல், இதில் பிருஸ்தைதன் என்ற வகுப்பினர் இஸ்ரேல் ஜாதியினரைத் துன்புறுத்தி பல யுத்தங்கள் செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

3) மகாவிஷ்ணு இராமனாக அவதரித்தார் என்று சொல்வதுபோல், கடவுள் சாலமன், டேவிட் என்ற இரு அரசர்களுக்கும் தெய்வீக சக்தியை அளித்ததாகவும் அதனால் அவர்கள் பல ஆச்சரியப்படத்தக்க செயல்களைச் செய்ததாகவும் கூறப்படுகிறது.

4) இட்சுவாகு வமிசத்தினருக்குப் பதிலாக இங்கே இஸ்ரேல் ஜீடா என்ற வகுப்பினர் கூறப்படுகிறார்கள்.

5) இராவணன் மற்றும் இராட்சதர்கள் தொல்லை கொடுப்பதாக விஷ்ணுவிடம் தேவர்கள் முறையிட்டார்கள் என்று வால்மீகி இராமாயணத்தில் கூறப்படுவதற்குப் பதிலாக இதில், கடவுள், சாலமனின் முன் தோன்றி, ஜெடன்சே என்பவனை இஸ்ரேல் ஜாதியினருக்கு அரசனாக குறிப்பிட்டுள்ளதாகவும், அந்த நாட்டிற்குப் போகும்படியும் சாமுவேலுக்கு கட்டளையிடுகிறார். இப்படி பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

**உத்தரபத்ம இராமாயணம்**

உத்தர, பத்ம இராமாயணங்களில் இலக்குமனனே இராவணன் முதலிய எல்லா அசுரர்களையும் கொல்லுவதாகவும், இராமன் யாருடைய உயிரையும் கொல்லாதவனாகவும் இராமனுக்கு எட்டாயிரம் மனைவியரும், இலக்குமணனுக்குப் பதினாயிரம் மனைவியரும் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

**துளசிதாஸ் இராமாயணம்**

1) துளசிதாஸ் இராமாயணத்தில் வில் - முறித்தலுக்கும் - திருமணத்துக்கும் முன்பே இராமனும் சீதையும் ஒருவரையொருவர் நோக்கி காதல் கொள்கின்றனர்.

2) துளசி இராமாயணத்தில் உத்திர காண்டம் இருந்தும் சீதை காட்டுக்கு அனுப்பப்படவில்லை.

3) பஞ்சவடியில் மாய மான் வருவதற்கு முன்பு சீதை தன் உடலைத் தானாகவே தீபத்தில் இட்டு அதே வடிவத்தில் மாய உருவம் ஏற்றுக் கொள்கிறாள். இறுதியாக இராமன் வற்புறுத்தலுக்கு இணங்கி, சீதை தீயில் இறங்கியதும் அவளது உண்மை உருவம் வந்துவிடுகிறது.

**ஆனந்த இராமாயணம்**

ஆனந்த இராமாயணம் என்ற சமஸ்கிருத இராமாயணத்தில் கீழக்கண்ட கதை சொல்லப் படுகிறது.

1) மற்ற இராமாயணங்களிலே குழந்தை இல்லையே என்று தசரதன் வருந்துவதாக கதை துவங்குகிறது. ஆனால், இதில் தசரதன் பிரம்மச்சாரியாக இருப்பதாக கதை துவங்குகிறது.

சரயு நதியில் ஆடியும் பாடியும், படகு சவாரி செய்து உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பவனாகத் தசரதன் இருக்கிறான்.

2) கோசல நாட்டு மன்னன் அனுப்பிய தூதை ஏற்று, அவனது மகள் கவுசல்யாவை மணக்க தசரதன் சம்மதிக்கிறான்.

3) தசரதன் - கவுசல்யா ஜோடிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளின் கையால் இராவணனுக்கு சாவு வர இருக்கிறது என்று பிர்மா இராவணனிடமே தெரிவிக்க இராவணன் சரயு நதியில் உலலாசப் பொழுது போக்கும் தசரதன் மீது படை எடுத்துச் செல்கிறான்.

4) தசரதனும், அவனது அமைச்சரான சுமித்திரனும் இராவணனுக்குத் தெரியாமல் தந்திரமாக ஒரு படகில் தொத்திக் கொண்டு கங்கைக் கரையை அடைந்தனர்.

5) இராவணன், தசரதன் மீது படையெடுத்தப் பிறகு, உடன் கோசலை நாட்டுக்குப் படை எடுத்துக் கவுசல்யாவை ஒரு பெட்டியில் அடைத்து, நடுக்கடல் திமிங்கலத்திடம் ஒப்படைக்கிறான். அந்தத் திமிங்கிலம் தனது வாயில் அடைத்து வைத்திருந்த அந்தப் பெட்டியை கன்னாக் கரையில் வைத்துவிட்டு சென்றபோது, அதே கரையில் ஒதுங்கிய தசரதன் அந்தப் பெட்டியைத் திறந்தான்.

6) தசரதனும் கவுசல்யாவும் அங்கே திருமணம் செய்து கொள்கிறார்கள்.

7) இராவணன் பெட்டியை வரவழைத்து திறந்து பார்த்தபோது சுமித்ரா, கவுசல்யா ஆகிய மூவரும் இருக்க, ஆத்திரப்பட்டு அவர்களை வெட்ட முற்படுகிறான. பிர்மா இராவணனுக்கு அறிவுரைக் கூறித் தடுத்து நிறுத்துகிறான். பெட்டியை இராவணன் திருப்பி அயோத்திக்கு அனுப்ப அங்கு தசரதன்-கவுசல்யா திருமணம் மீண்டும் ஆடம்பரத்துடன் நடைபெறுகிறது. கோசல நாடே தசரதனுக்குக் கொடுக்கப்படுகிறது. பிறகு தசரதன் சுமித்திரை, கைகேயி ஆகிய இரண்டு பெண்களை திருமணம் செய்து கொள்கிறான். இது ஆனந்த இராமாயணக் கதை.

**கதைகள் தொடர்கின்றன**

இராமாயணக் கதைகள் இன்னும் தொடர்கின்றன. அவைகளை எழுதிக் கொண்டே போகலாம். இந்தியில் மைதிலி சரண குப்தா எழுதிய சதோக் என்ற இராமாயணத்தில் ஒரு கதை! தெலுங்கில் சத்ய நாராயணா எழுதிய இராமாயணம் என்பதில் ஒரு கதை! போஜபுரி மொழியில் துவாரகா பிரசாத்சிங் எழுதிய சாகித்திய இராமாயணத்தில் மற்றொரு கதை! ஆச்சாரிய துளசிதாசின் அக்கினிப் பரீட்சையில் இன்னொரு கதை!

இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதைகளாக விளங்குவதிலிருந்தே இராமாயணம் நடந்த கதை அல்ல; அது ஒரு காட்டுமிராண்டிக் காலக் கற்பனை என்ற தந்தை பெரியார் கருத்து எவ்வளவு நிதர்சனமாக உண்மை என்பதற்குப் போதிய சான்றுகளாகும்.

இந்த இராமாயணம் தான் - இப்போது இந்திய அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்கலைக் கழகத்தில் இந்த உண்மைகளை பாடமாக நடத்துவதற்கு - ஏன் கூச்சல் போட வேண்டும்?

**– விடுதலை இராசேந்திரன்**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


**கழகத்தின் சாதி ஒழிப்பு கிளர்ச்சிகள் குறித்து தீண்டாமை ஒழிப்பு முன்னணி கருத்து**

*தமிழ்நாடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி அமைப்பான தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநிலத் தலைவர் பி.சம்பத், ‘ஆனந்த விகடன்’ வார ஏட்டுக்கு அளித்த பேட்டியிலிருந்து:*

**கேள்வி :** *சாதி ஒழிப்பு குறித்த புரிதல்களோடு இயங்கும் பிற இயக்கங்களுடன் இணைந்து உங்கள் அமைப்பு செயல்படுகிறதா?*

**பதில் :** *பெரியாரின் கொள்கைகளை திராவிட கட்சிகள் கைவிட்டு விட்டநிலையில், பெரியார் பெயரைக் காப்பாற்றும்படி, சாதியம் குறித்துப் பேசும் இயக்கமாக பெரியார் திராவிடர் கழகம் இருக்கிறது. அதனுடன் இணைந்து நாங்கள் பல இயக்கங்கள், கருத்தரங்குகள், கூட்டு நிகழ்வுகளை நடத்தி இருக்கிறோம்.*

**– ‘ஆனந்த விகடன்’, அக்.26, 2011, பக்.73**

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (5)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

இந்தியப் படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தி, தொடர்ந்து விடுதலைப் புலிகள் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளனர். புலிகளின் தற்கொலைப் படையினர் (கரும்புலிகள்) கோட்டையில் இருந்து வெளியேறிய விசேட அதிரடிப்படைப் பிரிவினரைத் தடுத்து நிறுத்தி கடும் சமர் புரிகின்றனர்.

கோட்டை முகாமிலிருந்து இரவு யாழ் மருத்துவ மனைக்குள் புகுந்த இந்தியப் படையினர் 5 டாக்டர்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். 9 தாதியர்களைக் "கற்பழித்து"ள்ளனர். மருத்துவமனையில் தங்கி சிகிச்சைப் பெற்று வந்த 150 நோயாளிகளும், அகதிகளாக மருத்துவமனையில் தஞ்சம் புகுந்திருந்த 100 பொது மக்களும் மருத்துவமனையினுள்ளேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் தப்பி வந்த டாக்டர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். இதை - தனது 2 வயது மகனை யாழ் மருத்துவமனையில் வைத்திருந்து குழந்தையும் சூட்டுக் காயம் அடைந்தவுடன் வெளியேறி அகதி முகாமில் மருத்துவ வசதியின்றியிருக்கும் ஒரு தாயாரும் உறுதிப்படுத்தினார். யாழ் மருத்துவமனை பிணக்காடாக மாறியுள்ளது. காயங்களில் இருந்து ரத்தம் வெளியேறிய பலர் இறந்துள்ளனர். இறந்து கொண்டிருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிரானில் இந்திய அமைதி காக்கும் படையினர் சுட்டு பொது மக்களில் ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையைத் தொடர்ந்து யாழ் குடா நாட்டில் உள்ள 8,30,000 (எட்டு லட்சத்து முப்பதினாயிரம்) மக்களின் அரைவாசிப் பேருக்கு மேல் வீடு வாசல்களை இழந்து அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்று அரசாங்க நிவாரண அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ் குடா நாட்டில் உணவுப் பொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மக்கள் உண்ண உணவின்றி வாடிக் கொண்டிருக்கின்றனர். பசி பட்டினியால் மக்கள் மடியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சண்டை நடை பெறுவதால் உணவு வினியோகப் பிரச்சினைகள் உள்ளன. இதனை இந்திய அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். அகதிகள் முகாம்களில் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வீடு வாசல்களை இழந்து தவித்து நிற்கும் மக்களுக்கு நிவாரணம் அளிக்க இன்று வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

யாழ் மருத்துவமனை பிணக்காடாய் இருக்கிறது. முன்னர் குண்டு வீச்சுத் தாக்குதலினால் காயமடைந்தோர் வைத்திய வசதியற்று செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

21 ஆம் தேதி இரவு 300க்கும் மேற்பட்ட குண்டுகள் யாழ் நகரின் மையப் பகுதியில் மட்டும் வீழ்ந்தன. இவை தொடர்ச்சியாக வீசப்பட்டன. இறந்தோர், காயமடைந்தோர் அப்புறப்படுத்தப் படாது அவ்விடத்திலேயே கிடக்கின்றனர். தனியார் மருத்துவமனை ஒன்றில் 22-க்கும் மேற்பட்ட காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,. ஆனால், அவர்களைப் பராமரிக்க டாக்டர்களும் இல்லை, மருந்தும் இல்லை. இரத்தம் ஓட ஓட காயங்கள் கவனிக்கப்படாது விடப்பட்டுள்ளன. ஏராளமான மக்கள் மருத்துவப் பராமரிப்பு இன்றி இரத்தப் பெருக்கினாலேயே இறக்கின்றனர். 21 ஆம் தேதி நடந்த தாக்குதலில் மட்டும் பெண்கள் சிறுவர்கள் முதியோர் உட்பட 250க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

புதன் கிழமை இரவு யாழ் மருத்துவமனையை ஆக்கிரமித்த இந்தியப் படையினர் தாதிகள், நோயாளிகள், டாக்டர்கள் உட்படப் பலரைக் கொன்றனர். மருத்துவமனையைச் சேர்ந்த ஆம்புலன்ஸ் ஓட்டுநரும் அவரது மனைவியும் 9, 14 வயதுடைய இரண்டு மகன்களும் ஒரு மகளும் அப்போது மருத்துவமனையில் இருந்தனர். 14 வயதுடைய மகனின் கண் முன்பாகவே மருத்துவ மனையில் நோயாளிகளாக இருந்த பலர் கொல்லப் பட்டனர்.

அதே வேளை அவனது கண் முன்பாக தந்தையும் சுட்டுக் கொல்லப்பட்டார். தாயையும் தங்கையையும் இந்திய ராணுவத்தினர் இழுத்துச் சென்றுள்ளனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. தம்பி துப்பாக்கிச் சூட்டுக் காயமடைந்தான். அப்போது அங்கு இறந்து கிடந்தவர்களுள் அந்தப் 14 வயதுச் சிறுவனும் இறந்தவன் போல் கிடந்து விட்டான். அங்கு மருத்துவமனையில் கடமை புரிந்து கொண்டிருந்த தாதிகள், டாக்டர்கள் வரிசையாக நிறுத்தப்பட்டனர். கைகயை உயர்த்திய நிலையில் அவர்களை 'எக்ஸ்ரே' அறைக்குள் கொண்டு சென்றார்கள். அங்கு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் அலறும் சத்தங்களும் கேட்டன. சத்தம் அடங்கிய சிறிது நேரத்தில் பின் 'எக்ஸ்-ரே' அறைக்குள் செல்லும் பாதையில் ஒரே குவியலாக நோயாளிகள் இறந்த நிலையில் காணப்பட்டனர். அவர்களுடைய கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. இன்னொரு இடத்தில் வெள்ளை நிற உடைகள் அணிந்தவர்கள் குவியலாக காணப்பட்டனர். இவர்கள் தாதிகள், டாக்டர்கள் என்று அந்தப் 14 வயதுச் சிறுவன் கூறினான். தனது காயம்பட்ட தம்பியைத் தூக்கிக்கொண்டு மதிலால் ஏறித் தப்பி வந்து விட்டேன் என்று அந்தச் சிறுவன் ஒரு டாக்டருக்கு அளித்த வாக்குமூலத்தில் கூறியுள்ளான்.

**22.10.87**

இன்று மாலை ஆறு மணியளவில் நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் அகதிகள் தங்கி இருந்த பகுதியில் விழுந்த ஒரு 'ஷெல்'லினால் 6 அகதிகள் கொல்லப்பட்டனர்.

4 மணியளவில் "ராசாவின் தோட்டத்தில்" வீடொன்றில் மேல் "ஷெல்" விழுந்ததில் 4 பேர் இறந்துள்ளனர். இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

மன்னாரில் நாலாம்கட்டை எனும் இடத்தில் 30 இந்திய படையினர் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். இவர்கள் வீடுகளுக்குள் புகுந்து ஒரு தாயின் இரண்டு மகள்களையும் "கற்பழித்து"ள்ளனர். பல பேரைப் பிடித்துக் கட்டி வைத்து அடித்துள்ளனர். அங்கிருந்து தப்பி வந்தவர்கள் இவ்வாறு தெரிவித்தார்கள். பிடிபட்டவர்கள் பற்றி எதுவும் தெரியவில்லை.

**25.10.87**

இன்று காலை 10 மணி முதல் 11 மணி வரையும் சங்குப் பிட்டியில் குண்டுவீச்சு விமானம் கடுமையாகத் தாக்கியது. இதனால் மினி பஸ் ஒன்றும், லாரி ஒன்றும் எரிந்து கொண்டிருக்கின்றது. 3 பேர் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

தாவடி, கொக்குவில் ஆகிய இடங்களில் இந்திய டாங்கிகளுக்கு விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதல் மேற்கொண்ட இடத்தில் இரு டாங்கிகள் முற்றாகச் சேதமடைந்தன. இதிலிருந்து எல்.எம்.ஜி. ஒன்றும், சில தானியங்கித் துப்பாக்கிகளும் விடுதலைப் புலிகளால கைப்பற்றப்பட்டன.

மாலை 3.30 மணியளவில் மருதனா மடத்திலிருந்து யாழ் நோக்கி நகர்ந்து வந்த இந்திய அமைதிப் படையினர் மக்கள் அகதிகளாகவும் கூட்டம் கூட்டமாகவும் இருக்குமிடங்களை நோக்கிப் பீரங்கிகளால் தாக்கியுள்ளனர். கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரியில் அகதிகளாக இருந்த மக்களை நோக்கி இந்திய அமைதிப் படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் 25 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். 60 பேருக்கு மேல் காயமடைந்தனர்.

(தொடரும்)

## விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு அல்ல

விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு அல்ல என்று நெதர்லாந்து நாட்டிலுள்ள ஹேக் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக நிதி சேகரித்ததாக 5 தமிழர்கள் மீது தொடரப்பட்ட வழக்கில் இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அய்ரோப்பிய ஒன்றிய கொள்கையின்படி விடுதலைப் புலிகள் இயக்கத் துக்கு பயங்கரவாத முத்திரை குத்த முடியாது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். ஏற்கனவே அய்ரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையை எதிர்த்து வழக்கு தொடரப் பட்டுள்ளது. நெதர்லாந்து நீதிமன்றத் தீர்ப்பு – இந்த வழக்கிற்கு வலிமை சேர்க்கும் என்று சட்டவிய லாளர்கள் கூறுகிறார்கள். அமெரிக்காவின் 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை, இத் தீர்ப்பு சர்வதேச ரீதியாக பெரும் தாக்கத்தை உருவாக்கும் என்று எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 03.11.2011**

## சுவீடனில் தண்டனை வழங்கும் உரிமை நீதிபதிகளுக்கு இல்லை

"பல காலமாக மரண தண்டனைக்கு எதிராக இயங்கி வரும் நான் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் மரண தண்டனையை கடுமையாக எதிர்க்கிறேன். இது, சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு முரணானது. மரண தண்டனை என்பது அரசே ஒரு மனிதனை கொல்வதன்றி வேறொன்றுமில்லை. ஆனால், ஓர் உயிரைக் கொல்லும் உரிமை எந்த அரசிற்கும் இல்லை. இன்று உலகிலுள்ள அறுபது விழுக்காடு நாடுகள் மரண தண்டனையை முற்றாக நீக்கியுள்ளன. இந்தியாவும் அதுபோல் மரண தண்டனையை முழுவதுமாக நீக்க இதுதான் சரியான நேரம்.

ஒருவனை மரண பயத்தில் வைத்திருப்பது என்பது பெரும் கொடுமையாகும். இப்படி இருபது ஆண்டுகள் மரண பயத்தில் அவர்களை வைத்திருந்ததுடன் இல்லாமல் இப்போது அவர்களை தூக்கில் வேறு போடுவோம் என்பது, சர்வதேச சட்டத்திற்கு முரணானது. 11 ஆண்டுகளுக்கும் மேலாக அவர்களின் கருணை மனுக்களை கிடப்பில் போட்டதற்கு, இந்த அரசு பதில் சொல்லியே தீர வேண்டும். சுவீடன் நாட்டில் குற்றத்தை உறுதி செய்வதற்கும் தண்டனை வழங்குவதற்கும் வெவ்வேறு அமைப்புகள் உள்ளன. தண்டனை வழங்கும் அமைப்பில் பேராசிரியர்களும், மனித உரிமையாளர்களும், மனோதத்துவ நிபுணர்களும், வழக்குரைஞர்களும் இருப்பார்கள். அவர்கள் குற்றவாளிகளுடன் நேரடியாக பேசுவார்கள். குற்றவாளிகளின் குடும்பத்தோடு அவர்கள் கலந்துரையாடுவார்கள். குற்றவாளிகளின் சமுகப் பங்களிப்பு, சமுகத் தொடர்பு ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டே தண்டனை முடிவு செய்யப்படும். அங்குள்ள சட்டப்படி நீதிபதி தன்னிச்சையாக தண்டனை விதித்துவிட முடியாது. அதுபோன்ற சட்ட அமைப்பு இந்தியாவிலும் வரவேண்டும்.

குஜராத் படுகொலையை அடுத்து நடந்த விசாரணைக்காக நானும் அந்தக் குழுவில் குஜராத் சென்றேன். அந்த விசாரணை முடிவில் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பிய அறிக்கையில், 'அது ஓர் இனப் படுகொலை' என்று குறிப்பிட்டோம். அதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கடுத்த முறை ஒரு சந்திப்பில் உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டில், இது போன்ற 'இனப்படுகொலை' வழக்குகளை எதிர்காலத்தில் எவ்வாறு எதிர் கொள்ளலாம் எனக் கேட்டார். அய்.நா.வின் இனப்படுகொலைக்கு எதிரான சட்டங்கள் போன்று இந்தியாவிலும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றேன். மோசமான இனப்படு கொலைகளில் ஏற்பட்ட அனுபவத்தினால் ருவாண்டாவிலும், யூகோஸ்லாவியாவிலும் இது போன்ற இனப்படுகொலைக் கெதிரான சட்டங்கள் உள்ளன.

"போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை செய்த எந்த ஒரு தனி மனிதனுக்கும் எதிராக, உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் வழக்கு தொடுக்க முடியும். இங்கிலாந்திலுள்ள சில அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் குஜராத்தில் 2002 இல் நடத்தப்பட்ட இனப் படுகொலையில் நரேந்திர மோடியின் பங்கு குறித்து வழக்கு தொடுத்துள்ளனர். அது இன்னமும் நரேந்திர மோடி இங்கிலாந்து செல்வதற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதே போன்ற வழக்கை ராஜபக்சே மீது உலகிலுள்ள எந்த நாட்டிலும் தொடுக்க முடியும். தேவைப்பட்டால் அதுபோன்ற வழக்கிற்கு ஆலோசனை வழங்கவும், பங்கு பெறவும் நானும் தயராக உள்ளேன். அது, ராஜபக்சேவின் வெளிநாட்டுப் பயணங்களை முடக்கிப் போட்டுவிடும்.

**– ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி எச்.சுரேஷ், சென்னை கருத்தரங்கில் பேசியது**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# அத்வானியின் ‘ஊழல்’ எதிர்ப்பு நாடகம்

காங்கிரஸ் - பா.ஜ.க. இரண்டு கட்சிகளுமே ஊழலுக்கு அப்பாற்பட்டவையல்ல. இப்போது, பா.ஜ.க.வின் அத்வானி தொடங்கியுள்ள ஊழல் எதிர்ப்பு ‘யாத்திரை’ நல்ல நகைச்சுவையாகும். ‘யாத்திரை’ என்ற சொல்லே ஊழலின் அடையாளம்தான். பகவானைநோக்கிபக்தர்கள் தம்மை வருத்திக் கொண்டு போய், தங்களின் குறைகளைத் தீர்த்து வைக்கக் கோருவதுதான் ‘யாத்திரை’. பகவானிடமிருந்து குறைகளைத் தீர்க்கும் ஒரு ‘சலுகை’யைப் பெறுவதற்கு ‘தன்னை வருத்திக் கொள்ளும்’ ஒரு செயல் லஞ்சமாகத் தரப்படுகிறது என்பது தானே, இதன் மய்யக் கருத்து?

அத்வானியின் யாத்திரை - வசதியாக குளுகுளு மகிழுந்தில் நடக்கிறது. பா.ஜ.க. மத்தியில் ஆட்சியிலிருந்த போதும், மாநிலங்களில் ஆட்சி செய்த போதும் ஊழலற்ற ஆட்சிகளையா நாட்டுக்கு வழங்கியது? 1998-லிருந்து 2004 ஆம் ஆண்டு வரை பா.ஜ.க. மத்தியில் ஆட்சியிலிருந்தபோதே நெடுஞ்சாலைகள் அமைப்பதி லும், 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டிலும் ஊழலைத் தொடங்கி வைத்துவிட்டது மறந்து போய்விட்டதா? இப்போது கருநாடகா, உத்தர்காண்ட், மத்திய பிரதேசம், பஞ்சாப் மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சிதான் நடக்கிறது. சுரங்கம் வெட்டும் உரிமைகளை வழங்குவதற்கும், அரசு நிலம் ஒதுக்கீட்டிலும், அரசு வேலை களுக்கான ஒப்பந்தங்கள் வழங்குவதிலும் முதலமைச்சர் பதவியை முறைகேடாகப் பயன்படுத்தி லஞ்சம் வாங்கிக் குவித்த கருநாடக பா.ஜ.க. முதல்வர் பி.எஸ். எடியூரப்பா, இப்போது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

உத்தரகாண்டில் பா.ஜ.க. முதலமைச்சராக இருந்த இரமேஷ் போக்ரியால் நிஷாங் என்பவரை, அவரது ஊழல் முறைகேடுகள் எல்லை மீறியதால் முதலமைச்சர் பதவியிலிருந்து கீழே இறக்கப்பட்டுள்ளார். நீர் மின் திட்டம் அமைப்பதில் அவர் பெற்ற ‘கையூட்டு’ கண்டறியப்பட்டு அவர் ஆட்சியில் அனுமதித்த 56 திட்டங்களுக்கான அனுமதி ரத்து செய்யப்பட்டுள்ளது. ‘கும்பமேளா’வுக்கு அரசு ஒதுக்கிய நிதி மற்றும் வெள்ள நிவாரண நிதியிலிருந்து அவர் ‘கையாடல்’ செய்ததோடு ஒவ்வொரு கொள் முதலிலும், கட்டுமானங்களிலும், இவர் ‘பங்கு’ வாங்கியது - மாநிலம் முழுதும் சிரிப்பாய் சிரித்தது. எல்லை மீறிய ஊழலுக்குப் பிறகு கட்சித் தலைமையே வரவிருக்கும் தேர்தலை மனத்தில் கொண்டு அவரை முதல்வர் பதவியிலிருந்து இறங்கச் சொல்லியிருக்கிறது.

குஜராத் முதல்வர், தமது மாநிலத்திலேயே ஊழலை விசாரிக்கும் ‘லோக் பால்’ அமைப்பை அமைக்க மறுத்து வருகிறார். பஞ்சாப் மாநிலத்தின் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக, தமது அமைச்சரவையிலிருந்து 3 அமைச்சர்களை பதவி நீக்கம் செய்திருக்கிறார். சட்டிஸ்கர் மாநிலத்தில் அரசு ‘ஒப்பந்தங்கள்’ வழங்குவதில் ஊழல் தலைவிரித்தாடுகிறது என்று, அரசு அதிகாரிகளே கூறுகிறார்கள். நக்சல்பாரிகளை ஒடுக்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாகக் கூறி அரசு பணத்தில் பெரும் தொகையை ஏப்பமிடுகிறார்கள். இதுதான் பா.ஜ.க. மாலலங்களின் நிலை. பெரும் தொழிலதிபர்களில் ஒரு பிரிவினர், காங்கிரஸ் ஆட்சி தங்களுக்கு வழங்கிய சலுகைகளின் வேகம் குறைந்து வருவதாகக் கவலைப்படுகிறார்கள். இரண்டாவது கட்ட பெரும் சலுகைகளை காங்கிரஸ் ஆட்சி வழங்காமல் தவிர்ப்பதாகக் கருதுகிறார்கள். எனவே, அவர்கள் தங்களின் தாராள சுரண்டலுக்கு ஆதரவாக பா.ஜ.க. ஆட்சியைக் கொண்டுவரத் துடிக்கிறார்கள் என்று ‘பிரன்ட் லைன்’ ஏட்டில் கட்டுரையாளர் பிரபுல் பித்வாய் எழுதியுள்ளார்.

### ‘ராம் சேனா’ – ஒரு கூலிப் பட்டாளம்

‘ராம் சேனா’ என்ற ஆர்.எஸ்.எஸ். கலவரக் கும்பல் வன்முறைகளில் ஈடுபட்டு வரும் செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. உச்சநீதிமன்ற வழக்கறிஞரும் அன்னா அசாரே குழுவைச் சார்ந்தவருமான வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் - இதே ‘ராம்சேனா’ நபர்களால் அவரது புதுடில்லி வழக்கறிஞர் அலுவலகத்திலேயே தாக்கப்பட்டார். ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் அம்மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தியே இந்தியா முடிவு எடுக்க வேண்டும் என்ற கருத்தை தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கூறியதற்காக இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இதேபோல் பெங்களூரிலுள்ள ஒரு மதுபான ஓட்டலுக்குள் புகுந்து பெண்களைத் தாக்கினர். காதலர் தினத்தில் காதலர்களைப் பொதுவிடங்களில் தாக்கினர். இந்த அமைப்பின் தலைவராக இருப்பவர் பெயர் முத்தலிக். இந்த அமைப்பு கூலிப் படையாகவே செயல்பட்டு வருவதை ‘தெகல்கா’ பத்திரிகையும் ‘ஹெட்லைன்ஸ் டுடே’ என்ற தொலைக்காட்சி அலை வரிசையும் அம்பலப்படுத்தியுள்ளன. தெகல்கா செய்தியாளர் ‘ராம்சேனா’ தலைவரை சந்தித்து, “நான் ஒரு ஓவியக் கண்காடசி நடத்தத் திட்டமிட்டுள்ளேன். அதற்கு மக்களிடம் விளம்பரம் வேண்டும்; நீங்கள் ஓவியக் கண்காட்சியில் இந்துக்களைப் புண்படுத்தும் ஓவியங்கள் இருப்பதாகக் கூறி தாக்குதல் நடத்தவேண்டும்; தாக்குதல் வெளிவரும்போது ஓவியக் கண்காட்சிக்கு விளம்பரம் கிடைக்கும்; செய்ய முடியுமா?” என்று கேட்டார். அந்த செய்தியாளர், தனது அடையாளத்தை மறைத்து, தான் ஒரு ஓவியர் என்று கூறிக் கொண்டார். உடனே ‘ராம் சேனா’ தலைவர் முத்தலிக், ரூ.60 லட்சம் கொடுத்தால் கலவரம் செய்து தாக்குதல் நடத்தத் தயார் என்று பேரம் பேசினார். இதை ரகசியமாகப் பதிவு செய்து ‘டெகல்கா’ அம்பலப்படுத்தியது. இந்த புலனாய்வு செய்திக்காக ‘டெகல்கா’ இந்த ஆண்டின் சிறந்த பத்திரிகைக்கான விருதையும் ஒரு அமைப்பின் சார்பில் பெற்றுள்ளது, ‘இராம பகவான்’ இப்படித்தான் சூழ்ச்சி வஞ்சகம் செய்து திராவிடர்களை வீழ்த்தியதாக வால்மீகி இராமாயணம் கூறுகிறது. இராமனுக்கு கூலிப் பட்டாளமாக, இராமாயணத்தில் ‘அனுமார்கள்’ இருந்தனர். அதே திருப்பணியைத்தான் ‘ராம சேனை’யும் இப்போது அரங்கேற்றிக் கொண்டிருக்கிறது போலும்.

# பாதிரிகளை வாயடைக்கச் செய்த வால்டேர்

உலகப் புகழ் பெற்ற நாத்திக வால்டேர் என்ற மேதை. பூசாரி குருக்கள் குடும்பத்தில் பிறந்த அவர், இளமைக் காலத்தில் மதபோதகராகத்தான் இருந்தார். அவரது 35 ஆவது வயதில்தான் அவருக்கு நாத்திக ஞானம் பிறந்தது. ஆரம்பத்தில் மதவாதிகள் அவரைப் பயங்கரமாக எதிர்த்தார்கள். எல்லாருடைய எதிர்ப்பையும் மீறி அவரது தர்க்கவாதமும், அறிவுத் தெளிவும், நாத்திகக் கருத்துக்களின் ஆழமும் உலகப் புகழ் பெற்றது. உலகம் பூராவும் அவர் புகழப்பட்டார்.

அந்த நிலையில் அவரைத் தங்கள் வயப்படுத்திக் கொள்வதே நல்லது, எதிர்த்துப் பயனில்லை என்ற முடிவுக்கு மதவாதிகள் வந்துவிட்டார்கள். வால்டேர் முதுமையடைந்து தமது 84 ஆவது வயதில் மரணப்படுக்கையில் சாய்ந்தார். அந்த நிலையில் அவரிடமிருந்து கடவுள் மதத்துக்கு ஆதரவான ஏதாவது ஒரு கருத்தைப் பெற்றுவிடவேண்டும். அதன் மூலம் அவர் நாத்திகர் இல்லை. கடவுளை நம்பிய ஆத்திகர் தான் என்று பிரச்சாரம் செய்யலாம் என்று பேராசைப்பட்டார்கள் பாதிரிமார்கள்! வால்டேரின் மனைவியையும், அவரது மூன்று பிள்ளைகளையும் சரிக்கட்டிக் கெண்டு பாதிரிமார்கள் இரண்டு பேர், வால்டேரின் படுக்கைக்கு இரண்டு பக்கமும் வந்து நின்று கொண்டு, பலப் பலவிதமாய்ப் போதனைகளை முழங்கினார்கள்!

மரணப்படுக்கையிலிருந்த வால்டேரால் அதைத் தடுத்து நிறுத்தி விட முடியவில்லை. அவர் நெஞ்சம் குமுற, கைகளை ஆட்டி மறுதலித்தபடி படுத்திருந்தார். இரண்டு பாதிரிமார்களும் வால்டேருக்குப் பாவ மன்னிப்பு ஜெபம் செய்து வைத்து, இறுதியாக அவரிடம் தங்கள் கடைசியான கேள்வியைக் கேட்டார்கள்.

‘.... மிஸ்டர் வால்டேர்! உங்கள் மரணம்... உங்கள் இறப்பு எப்படி அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்கள்?’ என்று சூழ்ச்சி உள்ளத்தோடு கேட்டார்கள். உயிர் போகப் போகும் கடைசி நேரத்திலாவது அவர் மதத்தின் வழியில் ஒரு பதிலைச் சொல்ல மாட்டாரா? என்பதே பாதிரிமார்களின் சூதான கேள்வியாக இருந்தது!

ஆனால், அந்த நிலையிலும் மரணத் தருவாயிலும் நாத்திக சீலன் - வால்டேர் தனது தெளிந்த அறிவையும், அழுத்தமான உணர்வுகளையும் வெளிப்படுத்தத் தவறவில்லை! அவர் பாதிரிகளைப் பார்த்துச் சொன்னார்....

‘.... நான் இயேசு இறந்ததைப்போல் இறக்க ஆசைப்படுகிறேன். இயேசுவின் உயிர் பிரியும் போது அவரது இடப்பக்கம் ஒரு பொய்யனும், வலப்பக்கம் ஒரு திருடனும் இருந்தார்கள். எனக்கும் இப்போது அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது! நீங்கள் இரண்டு பேரும் எனது இரண்டு பக்கத்திலும் இருக்கிறீர்கள்! இந்த நிலையிலேயே என் உயிர் போய்விட வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்’ என்றார் வால்டேர்!

பாதிரிமார்கள் இரண்டு பேரும் அதிர்ந்து போனார்கள்! அவமானத்தால் வாயடைத்து, தலைகுனிந்தார்கள்! முழுமை பெற்றுவிட்ட நாத்திகப் பகுத்தறிவாளன் ஒருவரின் உள்ளம் சாவிலும் நிலை குலையாது என்பதே உண்மை என்பதற்கு வால்டேரின் இறுதி நேரமும் ஒரு சான்று.

**நன்றி : ‘நாத்திகம்’, செப்.2011**

## கடாபியை வீழ்த்தியவர்கள் யார்?


லிபியாவின் முடிசூடா மன்னராக 42 ஆண்டுகளாக விளங்கிய கடாபியை அமெரிக்காவும் நேட்டோ படையும் உள்நாட்டுப் படையினரைக் கொண்டு சுட்டுக்கொன்றுவிட்டனர். 1969 இல் லிபியாவில் இத்ரியாஸ் என்ற கொடுங்கோல் மன்னராட்சியை இராணுவப் படை உதவியுடன் வீழ்த்தி, பதவிக்கு வந்தவர் கடாபி. கல்வி, சுகாதாரத்தை மக்களுக்கு வழங்கியதோடு, லிபியாவின் எண்ணெய் வளத்தையும், அமெரிக்க-அய்ரோப்பிய எண்ணெய் நிறுவனங்களின் சுரண்டலிலிருந்து தடுத்து நிறுத்தினார். ஒவ்வொரு லிபியருக்கும் சொந்த வீடு; ஆயிரம் மக்களுக்கு ஒரு மருத்துவர்; ஆப்பிரிக்காவில் கல்வியில் முதலிடம்; பெரிய தொழில்கள் அரசாங்கத்திடமே ஒப்படைத்தல் என்று அவர் சாதனைகளைப் படைத்தார். ஆனால், கருத்து சுதந்திரத்துக்கு இடமளிக்காமல், மூர்க்கத்தனமாக ஒடுக்கினார் என்பதே அவர் மீதான கடும் குற்றச்சாட்டு.

உலகின் இரண்டு சதவீத எண்ணெய் வளத்தைக் கொண்டுள்ள நாடு லிபியா. அதைக் குறி வைத்தே அமெரிக்க – அய்ரோப்பிய நாடுகள் கடாபியின் வாழ்க்கையை முடித்துவிட்டன. இந்த உள்நாட்டு கலவரத்தில் முதன்முறையாக எண்ணெய் நிறுவனங்கள் நேரடியாகப் பங்கு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனமான ‘வீடோல்’ – இங்கிலாந்து அமைச்சர் ஆலன்டன்கன் என்பவர் வழியாக ரூ.5000 கோடி டாலரை லிபியாவின் கலகப் படைக்கு வழங்கியது. லிபியாவின் சர்வாதிகாரியை விரட்டிவிட்டதாக லிபிய மக்கள் கொண்டாடலாம்; இப்போது லிபிய மக்கள் அமெரிக்க முதலையின் வாயில் சிக்கிக் கொண்டுவிட்டார்கள் என்பதே உண்மை.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd November 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | நவ. 10, 2011 | புரட்சி 10 | முழக்கம் 43 | விலை: ரூ.2.50

## இடிந்தகரையில் போராடும் மக்களை சந்தித்து கழகம் ஆதரவு



கூடங்குளம் அணுமின் நிலையத்தை இழுத்து மூடக் கோரி இடிந்தகரை கிராமத்தில் போராடி வரும் மக்களுக்கு, கழக சார்பில் நேரில் சென்று ஆதரவு தெரிவிக்கப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், நவம்பர் 5 ஆம் தேதி காலை 11 மணியளவில் இடிந்தகரைப் பகுதியில் போராட்டம் நடத்தும் மக்களை சந்தித்தனர். நாகர்கோயில் கழகக் கூட்டத்தில் பங்கேற்க வந்த நாளில் இந்த சந்திப்பு நிகழ்ந்தது. அன்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தலைமையில் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டம் நடந்தது. கழகத் தலைவர், பொதுச் செயலாளரை வை.கோவும் போராட்டக் குழுவினருடன் வரவேற்றனர். தொடர்ந்து அணுமின் நிலைய ஆபத்துகளை விளக்கி, கழகத் தலைவர், பொதுச் செயலாளர் உரையாற்றினர்.

அணுஉலை ஆபத்துகளை எதிர்த்து மக்கள் நடத்தும் வாழ்வுரிமைப் போராட்டத்துக்கு பெரியார் திராவிடர் கழகம் முழு ஆதரவை வழங்கும் என்று உறுதி தெரிவித்து உரையாற்றினர். அதை மக்கள் பலத்த கரவொலி செய்து வரவேற்றனர். ஒன்றரை மணி நேரம் போராட்டப் பந்தலில் இருந்துவிட்டு விடை பெற்றனர். கழக ஆலோசனைக் குழு உறுப்பினர் தூத்துக்குடி பால். பிரபாகரன், கன்னியாகுமரி மாவட்ட கழக அமைப்பாளர் வழக்கறிஞர் சதா, கழகத் தோழர் பிலிஸ்து, தூத்துக்குடி மாநகர கழக செயலாளர் அறிவழகன் ஆகியோர் உடன் வந்தனர்.

# ராஜீவ் கொலை விசாரணை: மறைக்கப்பட்ட உண்மைகள்

### மும்பை செய்தியாளர்களிடையே விடுதலை இராசேந்திரன் – திருச்சி வேலுச்சாமி விரிவான பேட்டி

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை முழுமையாக நடத்தப் பெறாததையும், சந்திராசாமி, சுப்பிரமணியசாமிக்கு உள்ள தொடர்புகளை ஜெயின் ஆணையம் சுட்டிக்காட்டிய பிறகும், அது பற்றி மத்திய காங்கிரஸ் ஆட்சி கவலைப் படாது, அலட்சியப் படுத்தியதையும் மும்பையில் நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி வேலுச்சாமி ஆகியோர் விரிவாக விளக்கினர். ராஜீவ் கொலை நடந்த 1991 ஆம்ஆண்டு மே 21க்கு முதல் நாள் வரை அப்போது மத்திய சட்டத் துறை அமைச்சராக இருந்த சுப்ரமணியசாமியுடன் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்றவர் வேலுச்சாமி. ராஜீவ் கொலையில் சுப்ரமணியசாமியின் செயல்பாடுகள் சந்தேகத்திற்குரியதாக இருந்ததை ஜெயின் ஆணையத்திடம் வேலுச்சாமி நேரடி சாட்சியம் அளித்துள்ளதோடு, சோனியா காந்தியையும் நேரில் சந்தித்து விளக்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் கொலை பற்றிய விசாரணை இப்போதும் முழுமையாக முடிவடையவில்லை. ‘எம்.டி.எம்.ஏ.’ (பல்நோக்கு ஒழுங்கு விசாரணை ஆணையம்) என்ற அமைப்பு, மத்திய புலனாய்வுக் குழுவால் (சி.பி.அய்.) நியமிக்கப்பட்டு, அதன் விசாரணை தொடங்கப்படவே இல்லை. இந்த நிலையில், இந்த விசாரணைக் குழுவுக்கு தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3 தமிழர்களின் சாட்சியங்கள் தேவைப்படும் நிலை வரலாம். இந்த நிலையில் அவர்களைத் தூக்கிலிடுவது நியாயமாகுமா என்ற கேள்வியை முன்வைத்தனர்.

ராஜீவ் காந்தி கொலை நடந்த மே 21 ஆம் தேதியன்று காலை தமிழக காங்கிரஸ் கட்சியினர் அப்போது தமிழக ஆளுநராக இந்த பீஷ்ம நாராயண சிங்கை சந்தித்து, ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் ராஜீவ் உயிருக்கு ஆபத்து நேரிடலாம். எனவே அந்த கூட்டத்தை தடை செய்ய வேண்டும் என்று மனு அளித்ததை கழகப் பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டினார். அதிர்ச்சியடைந்த செய்தியாளர்கள் இதற்கான ஆதாரம் என்ன என்று கேட்டபோது, அடுத்த நாளே இந்து உள்ளிட்ட பல தமிழக நாளேடுகளில் இந்த செய்தி வெளியானது என்று விடுதலை இராசேந்திரன் சுட்டிக் காட்டினார்.

ஊழலுக்கு எதிராக தொடர்ந்து போராடி வருபவர் சுப்ரமணிய சாமி, தானே என்று ஒரு செய்தியாளர் கேட்ட போது, சுப்ரமணியசாமியின் ஊழல் எதிர்ப்பு நேர்மையானதல்ல; அவரது ஊழல் எதிர்ப்பு, அவரது ‘சார்பு அரசியலை’ அடிப்படையாகக் கொண்டதே தவிர, மக்கள் நலன் சார்ந்தது அல்ல; வி.பி.சிங் ஆட்சிக் கவிழ்ப்புக்கு ராஜீவ் காந்தி ஆதரவுடன் சதி செய்து, ஆட்சியைக் கவிழ்த்து, ராஜீவ் ஆதரவுடன் சந்திரசேகர் அமைச்சரவையில் சட்ட அமைச்சர் பதவியைப் பரிசாகப் பெற்றவர் சுப்ரமணியசாமி. சட்ட அமைச்சரானவுடன் ராஜீவ் காந்தி மீதான போபோர்ஸ் பீரங்கி பேர ஊழல் ஒழிப்பு வழக்கை சீர்குலைக்க தனது அதிகாரத்தைப் பயன்படுத்தினார்” என்று பொதுச் செயலாளர் பதில் கூறினார்.

காந்தி மற்றும் இந்திரா காந்தி கொலையில் குற்றம்சாட்டப்பட்டு, மரண தண்டனைக்குள்ளானவர்கள் கருணை மனு போடவில்லையே என்று ஒரு செய்தியாளர் கேட்டார். இதற்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பதிலளிக்கையில், “பெயரால் அது கருணை மனு என்று அழைக்கப்பட்டாலும், உண்மையில் அது மரணதண்டனைக்குள்ளாக்கப் பட்டவருக்கு அரசியலைமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமை மனுதான். நீதிமன்றங்கள் சட்டத்தின் பார்வையில் மட்டுமே விசாரணை நடத்தி வழங்கப்பட்ட மரணதண்டனையில் சட்டத்துக்கு அப்பாற்பட்ட ‘மனிதப் பிழைகள்’ இருக்கும் வாய்ப்புகள் உண்டு என்பதால், சட்டத்துக்கும் அப்பால் குடியரசுத் தலைவருக்கு அப்படி ஒரு உரிமையை அரசியலமைப்பு வழங்கியிருக்கிறது. எனவே அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள ‘கருணை மனு’ என்ற உரிமையை இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படுத்துகிறார்களே தவிர, கருணையின் அடிப்படையில் தண்டனையிலிருந்து விலக்கு கோரவில்லை” - என்று விளக்கினார்.

வழக்கை விசாரித்த புலனாய்வுத் துறை தலைமை அதிகாரி கார்த்திகேயன், வழக்கை விசாரித்து தண்டனை வழங்கிய தலைமை நீதிபதி கே.டி. தாமஸ் ஆகியோரே இந்த மூன்று தமிழர்களை தூக்கிலிட வேண்டாம் என்று கருத்து தெரிவித்துள்ளதையும், சோனியா காந்தியும் இதே கருத்தை வலியுறுத்தி, குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணனுக்கு கடிதம் எழுதியதையும் விடுதலை இராசேந்திரன் சுட்டிக் காட்டினார். நீதிபதிகள் வர்மா, ஜெயின் விசாரணை ஆணையங்களை மத்திய காங்கிரஸ் ஆட்சி செயல்படவிடாமல் முடக்கிய சதிகளையும் விளக்கினார்.

ராஜீவ் கொலை நடந்த முதல் நாளில் சுப்ரமணியசாமியின் செயல்பாடுகள் மர்மமாக இருந்ததை விரிவாக விளக்கினார் திருச்சி வேலுச்

4 ஆம் பக்கம்

### அண்ணா நூலகத்தை சீர்குலைப்பதா? கழகம் கடும் கண்டனம்

சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள உலகத்தரம் வாய்ந்த அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை சீர்குலைக்கும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் முடிவை கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அண்ணாவுக்கும், அறிவுத் துறைக்கும் இழைத்துள்ள மாபெரும் அவமானமாகும். இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய கழகம் வலியுறுத்துகிறது!

சமச்சீர் கல்வியில் கை வைத்துப் பெற்ற அவமதிப்பை இதிலும் பெற வேண்டுமா?

## வெட்கக்கேடு: அவமானம்: நீதிபதிகளையும் ஆட்டுவிக்கும் சாதி வெறி

தமிழ்நாடு உயர்நீதிமன்றத்தின் நீதிபதி சி.எஸ். கர்ணன், சாதி அடிப்படையில் அவமதிக்கப்படுவதாக, தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்துக்கு புகார் செய்துள்ள சேதி, தமிழ்நாட்டுக்கே தலை குனிவைத் தருவதாகும். சாதி-தீண்டாமை, நீதிபதிகளிடமிருந்தே விடை பெறவில்லை என்றால், இந்த நீதித்துறையிடமிருந்து எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்?

உடன் பணியாற்றும் நீதிபதிகளே தம்மை இழிவுபடுத்துவதை நீதிபதி சி.எஸ். கர்ணன், உள்ளக் குமுறலுடன் கூறியுள்ளார். தம்மிடம் வரும் வழக்குகளில் சுயமாக எடுக்கும் முடிவுகளை ‘குழு மனப்பான்மையோடு’ முடிவுகளை எடுக்கும் நீதிபதிகள் விரும்புவதில்லை என்றும், எல்லோரும் கலந்து பேசி, ஒருமித்த தீர்ப்பை வழங்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்ப்பது நீதித்துறையின் நேர்மையான செயல்பாட்டுக்கு எதிரானது என்றும், அவர் ஆணையத்தின் தலைவர் பி.எல். புனியாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நீதித்துறை தொடர்பான நிகழ்வுகளிலும், அரசு நிகழ்ச்சியிலும் தலித் என்பதால், தன்னை பங்கேற்க அனுமதிக்கவில்லை என்றும், சென்னை திருமண நிகழ்வு ஒன்றில் தனக்கு அடுத்த இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு நீதிபதி, தனது செருப்புக் காலைத் தூக்கி, தனது காலின் மீது போட்டதாகவும், மற்றொரு நிகழ்வில், தனக்கு பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஒரு நீதிபதி, தனது இருக்கையைப் பிடித்து அசைத்துக் கொண்டே இருந்ததாகவும், தமது புகார் மனுவில் கூறியுள்ளார்.

ஆணையத்தின் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இந்த மனுவை அனுப்பியுள்ளார்.

கேரளாவிலிருந்தும், கடந்த ஏப்ரல் மாதம் இதே போன்ற ஒரு செய்தி வெளி வந்தது. மாநில பதிவுத் துறையில் தலைமைப் பதிவாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற ஏ.கே. இராமகிருட்டிணன் என்ற பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்த அதிகாரி, பதவி ஓய்வுப் பெற்ற பிறகு, காவல் துறையில் ஒரு புகாரைத் தந்தார்.

இவரது அலுவலகத்தையும், பயன்படுத்திய அரசு மகிழுந்தையும், பணி ஓய்வு பெற்ற பிறகு சில அதிகாரிகள் மாட்டுச் சாணத்தைத் தெளித்து தீட்டுக் கழிக்கும் சடங்குகளை நடத்தியதாகப் புகார் கூறியிருந்தார்.

இவர் பதவி ஓய்வு பெற்ற நாளன்று, சாதி வெறி அதிகாரிகள் பட்டாசு வெடித்து மகிழ்ந்துள்ளனர்.

மாநில மனித உரிமை ஆணையமும் தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையமும் இது குறித்து விரிவான விளக்கம் கேட்டது. அதைத் தொடர்ந்து மாநில காவல் துறை மூன்று அதிகாரிகளைக் கைது செய்தது.

‘இந்துஸ்தான் டைம்ஸ்’ நாளேடு (ஏப்.21,2011) இதை வெளியிட்டுள்ளது.

சாதி தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களின் தேவையையே இந்த நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

## பெட்ரோல் விலை உயர்வு: மக்களை ஏமாற்றும் மத்திய அரசின் வாதங்கள்

பெட்ரோலியப் பொருள்களின் விலையேற்றத்துக்கு அரசு கூறும் காரணங்கள் மூன்று. முதலாவது காரணம், கச்சா எண்ணெய் விலை. சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெயின் விலை உயர்ந்து வருவதால் அதற்கேற்றபடி பெட்ரோலியப் பொருள்களின் விலையை உயர்த்துவதைத் தவிர, வேறு வழியில்லை என்று அரசும் எண்ணெய் நிறுவனங்களும் கூறுகின்றன. ஆனால், இதில் உண்மையில்லை. கச்சா எண்ணெயின் இப்போதைய விலை பீப்பாய்க்கு 94 அமெரிக்க டாலர்கள். கடந்த மாதத்திலிருந்து எடுத்துக்கொண்டால் சராசரியாக 100 டாலர்கள். ஒரு டாலரின் மாற்று மதிப்பு 44.9 ரூபாய். சராசரியாகக் கணக்கிட்டால் ஒரு பீப்பாயின் விலை ரூ.4490. ஒரு பீப்பாய் என்பது 159.99 லிட்டர். ஆக ஒரு லிட்டர் கச்சா எண்ணெயின் மதிப்பு ரூ.28.

பெட்ரோல் உற்பத்தியில் கச்சா எண்ணெய் 90 சதவீதமும் உள்நாட்டில் தயாராகும் பொருள்கள் 10 சதவீதமும் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஒட்டு மொத்தமாக உற்பத்திச் செலவு ஒரு லிட்டருக்கு 30 ரூபாயைத் தாண்டாது. இந்தக் கணக்கின்படி பார்த்தால் கடந்த 2006-07 ஆம் ஆண்டில் உற்பத்திச் செலவு ரூ.19.47 ஆகவும், 2007-08 ஆம் ஆண்டில் ரூ.25.71 ஆகவும், 2008-09 ஆம் ஆண்டில் ரூ.26.11ஆகவும், 2009-10 ஆம் ஆண்டில் ரூ.21.75 ஆகவும் இருந்திருக்கும். அரசின் தகவல்களும் இதை உறுதிப்படுத்துகின்றன. வரி வகையில் அரசு எந்த லாபத்தையும் எதிர்பார்க்கவில்லை என்றால் பெட்ரோலை இதே விலைக்கே மக்களுக்குத் தந்திருக்க முடியும். அதனால் கச்சா எண்ணெயைக் காரணம் காட்டுவது போலியானது.

பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வுக்கு அரசு கூறும் இரண்டாவது காரணம், பெட்ரோலிய நிறுவனங்களுக்கு ஏற்படுவதாகக் கூறப்படும் இழப்பு. கடந்த நிதியாண்டில் மட்டும் பெட்ரோலிய நிறுவனங்களுக்கு ரூ.78 ஆயிரம் கோடி நஷ்டம் ஏற்பட்டதாகவும், நடப்பு நிதியாண்டில் ரூ.1 லட்சத்து 80 ஆயிரத்து 208 கோடி நஷ்டம் ஏற்படும் என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அரசு கூறுகிறது. இதன் அடிப்படையில் பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வு நியாயப்படுத்தப்படுகிறது.

இந்த வாதமும் மோசடியானது. ஏனெனில், பெட்ரோலிய நிறுவனங்களுக்கு ஏற்படுவது நஷ்டமே அல்ல. அது அரசின் விலைக்கும், இறக்குமதி விலைக்கும் இடையிலான வேறுபாடு மட்டுமே. (லாபத்தில் ஏற்படும் குறைவு) இதை ரங்கராஜன் கமிட்டி தெளிவாக்கியிருக்கிறது. உண்மையில் எண்ணெய் நிறுவனங்கள் அனைத்தும் லாபத்தில் இயங்குகின்றன என்பதை அந்தந்த நிறுவனங்களின் ஆண்டு அறிக்கையைப் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும். கடந்த 2006 முதல் 2010 வரையிலான நான்கு நிதியாண்டுகளில் இந்த நிறுவனங்கள் ரூ.1,26,288 கோடி லாபம் ஈட்டியிருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பெட்ரோலிய உயர்வுக்கு அரசு கூறும் மூன்றாவது காரணம், மானியங்களால் ஏற்படும் பொருளாதாரச் சுமை. சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், டீசல் போன்றவற்றுக்கு அதிக அளவில் மானியங்கள் தரப்படுவதால் அவற்றை ஈடுகட்டும் வகையில் பெட்ரோல் மற்றும் வர்த்தகப் பயன்பாட்டுக்கான எரிவாயு உள்ளிட்டவற்றின் விலையை உயர்த்த வேண்டியிருக்கிறது என்று அரசு கூறுகிறது.

ஆனால், புள்ளி விவரங்களின்படி 2006-07 முதல் 2009-10 வரையிலான நிதியாண்டுகளில் பெட்ரோலியப் பொருள்களுக்கு அரசு வழங்கியிருக்கும் மானியம் ரூ.23,325 கோடி. இதே காலகட்டத்தில் பெட்ரோலியப் பொருள்கள் மீதான வரிகள் மூலம் அரசுக்குக் கிடைத்திருக்கும் வருவாய் ரூ.4,10,842 கோடி. இதன்படி அரசு வழங்கியிருக்கும் மானியம், லாபத்தில் வெறும் 5.67 சதவீதம்தான். மாநிலங்களின் வரி வருவாயான ரூ.2,63,766 கோடியையும் சேர்த்தால் இந்த அளவு வெறும் 3.45 சதவீதம்தான்.

கிடைக்கும் லாபத்தில் சிறு துரும்பைத் தான் மானியம் என்கிற பெயரில் அரசு கிள்ளிப் போட்டிருக்கிறது என்பது இதன் மூலம் தெளிவாகிறது. மொத்தத்தில் பெட்ரோலியத் துறை லாபம் கொழிக்கும் துறை. பெட்ரோலியப் பொருள்களின் விலைகளை உயர்த்துவதன் நோக்கம் லாபத்தை அதிகரிப்பதேயன்றி, நஷ்டத்தைச் சமாளிப்பதல்ல.

இதுதவிர டீசலில் லிட்டருக்கு ரூ.18.19, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மண்ணெண்ணெயில் லிட்டருக்கு ரூ.29.69, சமையல் எரிவாயு சிலிண்டரில் ரூ.329.73 நஷ்டம் ஏற்படுவதாக அரசு கூறி வருகிறது. இப்படி மிகைப்படுத்தி நஷ்டக் கணக்கைக் காட்டுவதன் மூலம் மக்களின் எதிர்ப்பை அடக்கலாம் என்பது அரசின் திட்டம்.

**(‘தினமணி’ ஏட்டில் வெளிவந்த கட்டுரையிலிருந்து)**

## பெயரிலும் பெண்ணிற்கு இழிவு

மனிதனின் முக்கிய அடையாளம் அவரது பெயர்தான். ஆனால், பெயர் அடையாளத்திலேயே பால், சாதி வேறுபாடுகளும் புகுத்தப்பட்டு விடுகிறது. பெயரைக் கொண்டே ஒருவரது சாதியைக் கண்டறியும் நிலை இருந்து வந்தது. தமிழ்நாட்டில் பெரியார் இயக்கத்தின் புரட்சிகளில் ஒன்று – பெயருக்குப் பின்னால் ஒட்டியிருந்த ‘சாதி’யையும், பெயருக்குள் பதுங்கி நின்ற சாதியையும் ஒழித்தது ஆகும். இப்போதும் வடநாட்டில் பெயரைக் கொண்டே சாதியைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள். மகாராஷ்டிர மாநில அரசு ஆதரவுடன் அண்மையில் பெண்களுக்கு பெயர் மாற்றும் நிகழ்ச்சி நடந்துள்ளது. பெண் குழந்தைகள் பிறந்துவிட்டால், விரக்தியடைந்த பெற்றோர்கள் மராட்டியத்தில் ‘நாகுஷா’ என்று பெயர் சூட்டி விடுவார்களாம். இதற்கு ‘வேண்டப்படாதவள்’ என்று அர்த்தம். அண்மையில் சில தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இந்தப் பெண்களின் பெயர்களை மாற்றும் நிகழ்ச்சி ஒன்றை அரசின் ஆதரவோடு சதாரா என்ற பகுதியில் நடத்தி, பெயர் மாற்றத்துக்கான அரசு சான்றிதழ்களையும் பெற்றுத் தந்துள்ளன. ‘நாகுஷா’ என்று பெயர் சூட்டப் பெற்ற 200க்கும் அதிகமான பெண்கள், தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டுள்ளனர்.

## குமரி மாவட்டத்தில் கழகம் உதயம்

குமரி மாவட்டத்தில் பெரியார் திராவிடர் கழக அமைப்புக் கூட்டம் அக்,2, 2011 அன்று நாகர்கோவிலில் நடந்தது. தலைமை ஆலோசனைக்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் வழக்கறிஞர் சதா, மார்த்தாண்டம் ஜெபக்குமார், குலசேகரம் சேவியர், நெல்லை மாவட்ட செயலாளர் காசிராசன், தூத்துக்குடி மாவட்ட செயலாளர் குமார் ஆகியோர் பேசினர். கூட்டத்தில் சதா மாவட்ட அமைப்பாளராகவும், காரல் மார்க்ஸ், சுரேஷ், சுபாஷ், விஜய், பிலிப் ஆகியோர் மாவட்ட குழு உறுப்பினராகவும், சேவியர் திருவட்டார் ஒன்றிய செயலாளராகவும் நியமிக்கப்பட்டனர்.




அதனைத் தொடர்ந்து நவம்பர் 5 ஆம் தேதி மாலை நாகர்கோயிலில் செம்மாங்குடி சாலை தியாகச்சுடர் செங்கொடி திடலில் மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் சதா தலைமையில் கழக சார்பில் தூக்குத் தண்டனை எதிர்ப்பு விளக்கக் கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது. கழகப் பொறுப்பாளர்கள் சேவியர், தூத்துக்குடி ம.தி.மு.க. வழக்கறிஞர் வெற்றிவேல், பால். பிரபாகரன் உரையைத் தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்த கழகத்தின் முதல் பொதுக் கூட்டம் இதுவாகும். ஏராளமான பொது மக்கள் இறுதி வரை, கூட்டத்தின் கருத்துகளைக் கேட்டனர். கருத்துகளைக் கேட்ட பலர், அடுத்த நாள் கழகப் பொறுப்பாளர்களிடம் தொடர்பு கொண்டு தங்களின் பாராட்டுகளைத் தெரிவித்தனர். ரூ.2500க்கு கழக நூல்கள் விற்பனையாயின.

## அலைவரிசைகளில், சோதிடமும், கிரிக்கெட்டும்தான் ஓடுகிறது

# சமூகப் பொறுப்பற்ற தொலைக்காட்சிகளும், பத்திரிகைகளும்

## சாட்டையடி தருகிறார் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி

பத்திரிகைகளும், தொலைக்காட்சி ஊடகங்களும் செயல்படும் விதம் குறித்து முன்னாள் நீதிபதியும் தற்போதைய பிரஸ் கவுன்சில் தலைவருமான மார்கண்டேய கட்ஜு தெரிவித்துள்ள கருத்துக்கள் ஊடகங்கள் வட்டாரங்களில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

சி.என்.என். - ஐ.பி.என். அலைவரிசையில் கரன் தாப்பர் நடத்தும் நிகழ்ச்சியில் பங்கேற்றபோது கட்ஜு கூறியவை சர்வதேச அளவில் பத்திரிகையாளர்களின் கடும் விமர்சனத்துக்கு இலக்காகியுள்ளது. அந்த கேள்வி-பதில் நிகழ்ச்சியின் முக்கியமான பகுதிகள்.

**கரன் தாப்பர் : சமீபத்தில் சில பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி ஆசிரியர்களை சந்தித்தபோது, ‘ஊடகங்கள், தொலைக்காட்சி, பத்திரிகைகள் பொறுப்பில்லாமல் செயல்படுகிறது’ என்று வருத்தப்பட்டீர்கள். ஊடகங்களின் செயல்பாடு உங்களுக்கு ஏமாற்றம் தருகிறதா?**

மார்க்கண்டேயர் கட்ஜு : ரொம்ப ஏமாற்றம் அளிக்கிறது.

**உங்களுக்கு ஊடகங்கள் பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லையா?**

நிச்சயமாக இல்லை.

**உண்மையாகவா சொல்கிறீர்கள்?**

உண்மையாகவே எனக்கு ஊடகங்கள் பற்றி நல்ல அபிப்பிராயம் இலலை. மக்கள் நலனுக்காக ஊடகங்கள் பணியாற்ற வேண்டும். ஆனால், அவர்கள் அப்படி இல்லை. சில நேரங்களில் மக்கள் நலனுக்கு எதிராக செயல்படுவதையும் பார்க்கிறேன்.

**உண்மையான தகவல்களை பாரபட்சம் இல்லாத முறையில் வழங்குவது ஊடகங்களின் கடமை என்று அந்தச் சந்திப்பில் குறிப்பிட்டீர்கள். ஊடகங்கள் நேர்மையாகச் செயல்படவில்லையா, அல்லது அது போதுமானதாக இல்லையா?**

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியாவின் வரலாற்றில் ஒரு மாற்றம் நேர்ந்து கொண்டிருக்கிறது. நில பிரபுத்துவ சமூகமாக இருந்த இந்தியா இன்றைக்கு நவீன தொழில்சார் சமுதாயமாக மாறும் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். இது வலிகள் மிகுந்த காலகட்டம். முன்பு ஐரோப்பா இதே மாற்றத்தைச் சந்தித்த நேரத்தில், மக்களுக்கு அந்த வலியைக் குறைக்கும் வகையில் அங்குள்ள ஊடகங்கள் செயல்பட்டன.

**இந்தியாவில் அப்படி நடக்கவில்லை என்கிறீர்களா?**

இங்கே அதற்கு தலைகீழாக நடக்கிறது. ஐரோப்பாவில் ரூசோ, தாமஸ் பய்ன், திதரோ மாதிரி எழுத்தாளர்கள் மக்களை மாற்றத்துக்கு தயார் செய்தார்கள். “இந்த நாட்டிலுள்ள கடைசி சாமியாரின் குடலை உருவி அதை கடைசி மன்னனின் கழுத்தில் சுருக்கிட்டு தொங்கவிடும் வரையில் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்காது” என்று முழங்கினான் பிரஞ்சு சிந்தனையாளன் திதரோ.

**அவர்களோடு ஒப்பிட்டால் இந்தியாவின் வரலாற்று மாற்றத்துக்கு நமது ஊடகங்களின் பங்களிப்பு எப்படி?**

இந்திய ஊடகங்கள் பெரும்பாலான நேரங்களில் மக்களுக்கு எதிரான நிலை எடுப்பதைப் பார்க்கிறேன். மூன்று உதாரணம் காட்டலாம். முதலாவது, பற்றி எரியும் உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை ஊடகங்கள் திசை திருப்புகிறது. இங்கே பிரச்னைகள் எல்லாமே பொருளாதார அடிப்படையிலானவை. நம் மக்களில் இன்னமும் 80 சதவீதம் பேர் வறுமை, வேலையின்மை, விலைவாசி, நோய்களால் பாதிக்கப்பட்டு வாழ்க்கை நடத்துகின்றனர். அந்தப் பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து தீர்வு காணத் தூண்டாமல், பிரச்சினைகளில் இருந்து திசை திருப்புகிறது ஊடகங்கள். சினிமா நட்சத்திரங்கள், அழகிப் போட்டி, கிரிக்கெட் மாதிரியான சமாச்சாரங்களை பெரிதுபடுத்தி நாட்டுக்கு அத்தியாவசியமானது, அந்த விஷயங்கள்தான் என்பதுபோல் ஒரு பிரமையை உண்டாக்குகிறது.

**ஃபேஷன், சினிமா, கிரிக்கெட் ஆகியவற்றை மக்களுக்கு போதையேற்ற ஊடகங்கள் பயன்படுத்துகிறது என்கிறீர்களா?**

ஆமாம். கிரிக்கெட் நமது மக்களுக்கு ஒரு போதைப் பொருள். ஒப்பியம் மாதிரி. ரோமாபுரி பேரரசன் சொல்வானாம், ‘மக்களுக்கு ரொட்டி கொடுக்க வழியில்லை என்றால் சர்க்கஸ் பார்க்க ஏற்பாடு செய்’ என்று. இந்தியாவில் மக்களுக்குத் தேவையானதைக் கொடுக்க முடியாவிட்டால் அவர்களை கிரிக்கெட் பார்க்க வைக்கிறோம். நிறைய ஊடகங்களில் இரவு பகல் எந்த நேரமும் ஏதாவது கிரிக்கெட் மேட்ச் ஓடிக் கொண்டே இருக்கிறது, அதுதான் நாட்டின் ஒரே பிரச்சினை மாதிரி.

**மக்கள் விரோதமாக ஊடகங்கள் செயல்படுவதைக் காட்டும் இன்னும் இரண்டு பிரச்சினைகள் என்னென்ன?**

இரண்டாவது அநேக நேரங்களில் மக்களை பிளவுபடுத்துகிறது ஊடகங்கள். இங்கே பல தரப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். ஒருவரை ஒருவர் மதித்தால்தான் ஒற்றுமையாக நிம்மதியாக வாழ முடியும். ஆனால் என்ன நடக்கிறது? ஒரு ஊரில் குண்டு வெடித்தால் போதும். அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் குண்டு வைத்தது நாங்கள் தான் என்ற இந்தியன் முஜாஹிதின் கூறுகிறது அல்லது ஜய்ஷ் இ முகமத் அல்லது ஹர்கத் உல்ஜிஹாத் அமைப்பு கூறுகிறது என்று ஏதோ ஒரு முஸ்லீம் பெயரை சேனல்கள் சொல்கின்றன. அதற்குள் எப்படித் தெரியும் என்றால் எஸ்.எம்.எஸ். வந்தது, இமெயில் வந்தது என்று காட்டுகிறார்கள். எஸ்.எம்.எஸ், இ.மெயில் எல்லாம் யார் வேண்டுமானாலும் யார் பெயரிலும் அனுப்ப முடியும். யாரோ ஒரு விஷமி அனுப்பியிருக்கலாம். அதை பெரிதாக தொலைக்காட்சிகளில் காட்டி மறுநாள் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கும்போது என்ன ஆகிறது? முஸ்லிம்கள் எல்லாரும் குண்டு வைப்பவர்கள், தீவிரவாதிகள் என்று ஒரு மதத்தையே ஒட்டு மொத்த கொடூரகாரர்களாக மாதிரி சித்தரிக்கிறது ஊடகங்கள். எந்த மதமாக இருந்தாலும் 99 சதவீதம் பேர் நல்லவர்கள் என்பதுதான் உண்மை.

> **இன்ன கலர் சட்டை அணிந்தால் நீங்கள் இறங்கும் காரியம் வெற்றி என்றெல்லாம் அபத்தமாக சொல்லி மக்களின் மூளையை மழுங்கடிக்கிறார்கள்.**

**ஊடகங்கள் இந்த விஷயத்தில் அலட்சியமாக நடக்கிறது. தகவல் உண்மையா என்பதை சரி பார்க்காமல் செய்தி வெளியிடுகிறது என்கிறீர்களா அல்லது வேண்டுமென்றே அப்படிச் செய்வதாக நினைக்கிறீர்களா?**

மதத்தின் பெயரால் மக்களைப் பிளவுபடுத்த ஊடகம் வேண்டுமென்றே இவ்வாறு நடப்பதாக நினைக்கிறேன். நிச்சயமாக இது நாட்டு நலனுக்கு எதிரானது.

**ஊடகங்கள் வேண்டுமென்றே மக்களுக்குள் பிளவை உண்டாக்குவதாகவா சொல்கிறீர்கள்?**

குண்டு வெடித்த சிறிது நேரத்தில் எஸ்.எம்.எஸ். வந்தது என்பதை சாக்கிட்டு ஒரு மதத்தையே வில்லனாக ஊடகங்கள்சித்தரிக்கும்போது அதற்கு வேறென்ன அர்த்தம் கொடுக்க முடியும்?

ஒரு நிலபுரபுத்துவ சமூகம் - நவீன சமூகமாக மாறுகிற காலகட்டத்தில் அந்த மக்களும் நாடும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அறிவியல் சிந்தனை பரவ வேண்டும். அதற்கு ஊடகங்கள் உதவ வேண்டும். ஐரோப்பாவில் நடந்ததை சொன்னேன். இங்கே என்ன நடக்கிறது? அறிவியல் சிந்தனையை தூண்டுவதற்கு பதில் ஜோசியம், மூட நம்பிக்கை போன்ற அறிவியலுக்கு எதிரான விஷயங்களை பரப்புகிறது ஊடகங்கள். ஏற்கனவே நமது நாட்டில் 80 சதவீத மக்கள் சாதி, மதம், மூடநம்பிக்கை போன்ற விஷயங்களில் சிக்கி மனரீதியாக பின் தங்கி நிற்கிறார்கள். அவர்களை அந்த மாயைகளில் இருந்து விடுவித்து ஒரு மேம்பட்ட சிந்தனை வட்டத்துக்குக் கொண்டுவர, முற்போக்கான எண்ணங்கள் உருவாக ஊடகங்கள் தூண்டுதலாக இருக்க வேண்டுமா, வேண்டாமா? ஆனால், மக்களை இன்னும் மடையர்களாக்கும் வேலையை நமது மீடியா செய்கிறது. பல அலைவரிசைகளில் பெரும்பாலான நேரம் சோதிடம் ஓடுகிறது. இன்றைக்கு நீங்கள் இந்த கல் மோதிரம் போட வேண்டும், இன்ன கலர் சட்டை அணிந்தால் நீங்கள் இறங்கும் காரியம் வெற்றி என்றெல்லாம் அபத்தமாக சொல்லி மக்களின் மூளையை மழுங்கடிக்கிறார்கள். என்ன பேத்தல் இது!

**ஆக, ஊடகங்கள் என்ன செய்ய வேண்டும் என சமுதாயம் எதிர்பார்க்கிறதோ அதை செய்யவில்லை என்கிறீர்கள். தன்னை நம்பிய இந்தியாவை ஊடகங்கள் கைவிட்டுவிட்டதாக எடுத்துக் கொள்ளலாமா?**

ஒரு பெரிய சமுதாய மாற்றத்தில் ஊடகங்களின் பங்களிப்பு அபாரமானதாக இருக்க வேண்டும். ஏனென்றால் ஊடகம் என்பது ஏதோ சாமான் உற்பத்தி செய்து சந்தையில் விற்கும் சாதாரணமான வியாபாரம் கிடையாது. அறிவு சம்பந்தப்பட்டது. சிந்தனை சம்பந்தப்பட்டது. மக்களுக்கு அறிவியல் அடிப்படையிலான புதிய சிந்தனைகள் உருவாக தூண்டுகோலாக செயல்படும் புனிதமான பணி ஊடகங்களுக்கு தரப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை அது செய்ய தவறினால் நாட்டை மக்களை கைவிட்டுவிட்டதாகத்தானே அர்த்தம்?

**இந்தியாவை இன்னும் மோசமாக்குகிறது ஊடகங்கள் என்றா சொல்கிறீர்கள்?**

அதுதான் என் மதிப்பீடு. ஒரு சோதிடர் உட்கார்ந்துகொண்டு, ‘இது அந்த ராசி, அது அணிந்தால் உங்களுக்கு ராசி’ என கதை அளந்து கொண்டிருப்பதை எத்தனை அலைவரிசைகளில் பார்க்கிறோம்.

**‘செய்தியை சரியாக சொல்வதில்லை; உண்மைகளை இஷ்டத்துக்கு திரித்துக் கூறுகிறது; கருத்தையும் வார்த்தைகளையும் வெட்டி ஒட்டி வேறு அர்த்தம் கொடுக்கிறது’ என்பது ஊடகங்கள் பற்றிய மக்களின் எண்ணம். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

அதேதான் என் கருத்தும். 2009 தேர்தலில் பார்த்தோம். முன்பெல்லாம் செய்தியாளர்கள் வேட்பாளரைப் பார்த்து, ‘எனக்கு பத்தாயிரம் கொடு; உனக்கு சாதகமாக செய்தி போடுகிறோம்’ என்று பேரம் பேசினார்கள். அதைப் பார்த்து பத்திரிகை உரிமையாளர்களுக்கு வேறு சிந்தனை உதித்தது. ‘நாம்தான் சம்பளம் கொடுக்கிறோமே, செய்தியாளர்கள் இப்படியும் சம்பாதிக்க ஏன் இடமளிக்க வேண்டும்? நாமே சம்பாதிக்கலாமே?’ என்று முடிவு செய்து ‘ஒரு கோடி கொடுங்கள், நான் ஒரு பேக்கேஜ் தருகிறேன்’ என்று ஒப்பந்தம் போடுகிறார்கள். ஒரு பத்திரிகையில் “வேட்பாளர் ‘ஏ’ அமோக வெற்றி பெறுவார்” என்ற செய்தி மேலே; “அவருக்கு டெபாசிட் போய்விடும், ‘பி’தான் வெற்றி பெறுவார்!” என்று கீழே முதல் பக்கத்திலேயே பிரசுரமான விசித்திரத்தைப் பார்த்தோம். கண்ணை விற்று சித்திரம் வாங்கும் வேலை.

**இந்த மாதிரி பிரச்சினைகளுக்கு தீர்வு காண நீதிபதி வர்மா தலைமையில் செய்தி பரப்புவோர் சங்கம் அமைத்து சுயமாக சில கட்டுப்பாடுகளை கொண்டு வர முயற்சி செய்தார்கள்....**

அதில் எந்த பலனும் ஏற்பட்டதாக தெரியவில்லையே. நீங்கள் தொழில் நடத்துவது ஏழைகள் வாழும் நாட்டில்; அதனால் அவர்களுடைய பிரச்னைகளுக்கு முன்னுரிமை கொடுத்தாக வேண்டும்; அதை விடுத்து ‘லேடி காகா வந்து விட்டார்... கரீனா கபூர் தனது மெழுகு சிலையை மிகவும் சிலாகித்தார்...’ இதெல்லாமா முக்கிய செய்தி ஆவது?

4 ஆம் பக்கம்

# காவல்துறை கெடுபிடிகளை மீறி ஈரோட்டில் நாத்திகர் பேரணி

ஈரோடு மாநகர கழகத்தின் சார்பாக தந்தை பெரியாரின் 133வது பிறந்தநாள் விழா கொடியேற்று விழா, நாத்திகர் விழா ஆகியவை 17.09.20011 அன்று கொண்டாடப்பட்டது.

ஈரோடு அரசு (பெரியார்) தலைமை மருத்துவமனையில் கழகத்தின் சார்பாக அமைக்கப்பட்டு இருந்த தந்தை பெரியாரின் படத்தினை முன்னாள் நகர தந்தை சுப்பிரமணியம் திறந்து வைத்து மாலை அணிவித்தார். அங்கு இருந்து தோழர்கள் ஊர்வலமாக இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் பெரியார் சிலையை அடைந்தனர்.

பெரியார் சிலைக்கு கழகத்தின் தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ரத்தினசாமி கழகத்தின் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் மாலை அணிவித்தனர். பின்னர் அங்கு இருந்து ஊர்வலம் பெரியாரின் நினைவு இல்லத்தை அடைந்து அய்யா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின் தோழர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

உணவுக்குப் பின் புறப்பட்ட ஊர்வலம் காளைமாட்டு சிலை, கொல்லம்பாளையம், சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில் அமைக்கப் பட்டு இருந்த கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றிவிட்டு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம் அவர்களின் இல்லத்திற்கு சென்றனர். அங்கு தோழர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டது.



அங்கு இருந்து புறப்பட்ட ஊர்வலம் பெரியார் நகர், சூரம்பட்டி நால்ரோடு, கிருஷ்ணம்பாளையம், லட்சுமி திரையரங்கம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி வலசு ஆகிய பகுதிகளில் கழகக் கொடியினை ஏற்றிய பின் தோழர் இரத்தினசாமி தொழிற் சாலையை அடைந்தது. அங்கு தோழர் களுக்கு மதிய உணவு வழங்கப் பட்டது. சிறிது ஓய்வுக்கு பின் தோழர்கள் அனைவரும் மரவப் பாளையம் நாத்திகர் விழா நடக்கும் பகுதியை வந்தடைந்தனர்.

அங்கு தோழர் சுப்பிரமணியம், திருமுருகன் ஆகியோர் அலகு குத்தி கார் இழுக்க, தோழியர்கள் தீச்சட்டி எடுத்து கடவுள் மறுப்புக் கொள்கை களை முழங்கினர். மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாணிக்கம், பகுத்தறிவாளர் பேரவையைச் சார்ந்த மருத்துவர் சத்திவேல் ஆகியோர் துவக்கிவைத்து உரையாற்றினர்.

காவல்துறை ஊர்வலத்திற்கு அனுமதியில்லை எனக்கூறி தடுத்தது. தோழர்கள் ஒருங்கிணைந்து முடிந்தால் கைது செய் எனக் கூறியபடி ஊர் வலம் தொடர்ந்தது. செய்வதறியாமல் நின்ற காவல்துறை ஊர்வலத்திற்கு அனுமதி அளித்தது.

ஊர்வலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு முழக்கங்களும் கடவுள் மறுப்பு முழக்கங்களும் எழுப்பியபடி தோழர் கள் சென்றனர். மீண்டும் இடைமறிந்த காவல்துறை கடவுள் இல்லை என்று சொல்லிக் கொள்ளுங்கள் ஆனால் குறிப்பிட்ட ஒரு கடவுளைப் (மாரியம்மன், அய்யப்பன்) பற்றி முழக்கம் எழுப்பக் கூடாது என்றார்கள். தோழர்கள் காவல்துறையிடம் வேண்டுமானால் வழக்கு போட்டுக் கொள், தேவையில்லாமல் இடையூறு செய்யாதே என்றபடி தொடர்ந்து முழக்கம் எழுப்பியபடி சென்றனர். இதுவரை இது மாதிரியான ஊர்வலத்தைக் கண்டிராத பொது மக்கள் வீதியின் இருபுறமும் கூடி பார்த்து வியந்தனர்.

பொது கூட்ட மேடை வந்தடைந்தது. அங்கு அமைக்கப்பட்டு இருந்த கழகத்தின் கொடியை தோழர் வீர முத்து ஏற்றி வைத்தார். குமார் தலைமையேற்க ரமேஷ்குமார் வரவேற் புரையாற்றினார். தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் இரத்தினசாமி, மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், கழக பேச்சாளர் தோழர் வேலுச்சாமி ஆகியோர் கடவுள் மறுப்பு பற்றியும், மூடநம்பிக்கை ஒழிப்பு பற்றியும், பெரியாரின் தேவை குறித்தும், சாதி ஒழிப்பு களத்தில் கழக செயல்பாட்டினையும் விளக்கி உரை நிகழ்த்தினர். தோழர் சண்முகபிரியன் நன்றியுரை வழங்கினார்.

பொதுக் கூட்டம் துவங்கும் முன்பு தோழர் காவை இளவரசனின் மந்திர மல்ல, தந்திரம் தான் நிகழ்ச்சி நடை பெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை தோழர்கள் ரத்தினசாமி, சசிக்குமார், குமார், சிவா, திருமுருகன், ரமேஷ் குமார், சண்முகபிரியன் மற்றும் பகுத்தறிவாளர் பேரவையைச் சார்ந்த தோழர்கள் சிவக்குமார், மோகன்ராசு ஆகியோர் செய்து இருந்தனர். அப்பகுதியை சார்ந்த மக்கள் இவ்விழா புதியது என்றதால் பெருந்திரளாக கலந்து கொண்டு கூட்டத்தைக் கேட்டதோடு, கழக வெளியீடுகளை வாங்கிச் சென்றனர்.

**- செய்தி.ம.நிவாசு**

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

*ஊடகங்கள் ஏன் மாறவில்லை என்று நினைக்கிறீர்கள்?*

*அவர்களுக்கு எந்த பயமும்இல்லை. அது ஒரு காரணம். கொஞ்சமாவது பயம் இருக்க வேண்டும். தப்பு செய்தால் தண்டனை நிச்சயம் என்ற பயம்.*

*அதற்கு நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள்?*

*பத்திரிகைகளை மட்டும் தான் பிரஸ் கவுன்சில் இப்போது கேள்வி கேட்க முடியும். பிரஸ் கவுன்சில் பெயரை ஊடகங்கள் கவுன்சில் என மாற்றி தொலைக் காட்சி அலைவரிசைகளையும் அதன் வரம்புக்குள் கொண்டுவர வேண்டும். சொல்லித் திருந்தாத ஊடக நிறுவனத்துக்கு அரசு விளம்பரங்களை நிறுத்துவது; உரிமங்களை குறிப்பிட்ட காலத்துக்கு முடக்கி வைப்பது போன்ற தண்டனை அளிக்க அந்த கவுன்சிலுக்கு அதிகாரம் வேண்டும். பிரதமருக்கு எழுதியிருக்கிறேன்.*

*அது பத்திரிகை சுதந்திரத்தை பாதிக்கும் என்பார்களே?*

*ஜனநாயகத்தில் எல்லோரும் மக்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள். எந்த சுதந்திரமும் எல்லையில்லாதது அல்ல. சில கட்டுப்பாடுகள் இருந்தாக வேண்டும். ஊடகங்கள் இதை உணர்ந்து கொண்டால் நாட்டுக்கு நல்லது.*

*ஊடகங்களை உங்களுக்கு சுத்தமாக பிடிக்காது போலிருக்கிறதே?*

*நான் ரொம்பவும் மதிக்கிற சில ஊடகங்களும் இருக்கின்றன. உதாரணமாக சாய்நாத்தை சொல்லலாம். அவர் மேல் எனக்கு ரொம்ப மரியாதை உண்டு. விவசாயிகள் தற்கொலை பற்றி நிறைய எழுதியிருக்கிறார். ஆனால், அப்படிப்பட்ட ஆட்கள் குறைவு. பெரும்பாலான செய்தியாளர்கள் அரைகுறையாகத்தான் இருக்கிறார்கள். பொருளாதாரக் கொள்கை, அரசியல் விஞ்ஞானம், இலக்கியம், தத்துவம் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவு இல்லாதவர்கள்.*

*முதல் பக்கத் தொடர்ச்சி*

*சாமி. ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் குண்டு வெடிப்புக்கு உள்ளானபோது எடுத்த வீடியோ படம், உளவுத் துறை இயக்குனர் எம்.கே. நாராயணனிடம் இருந்த நிலையில், அதை, விசாரணை ஆணையங்கள் முன் சமர்ப்பிக்க மறுத்தது ஏன்? ராஜீவுக்கு மாலை போடும் வரிசையில் நின்ற தாணுவின் படத்தில் இல்லாத நெற்றிப் பொட்டு பிணமாகிக் கிடக்கும் தாணுவின் புகைப்படத்தில் வந்தது எப்படி? சந்திரசாமியின் நடவடிக்கைகள் சந்தேகத்துக்குரியதாக இருக்கின்றன. இந்தக் கொலைக்கு அவர் வழியாக பணப் பரிமாற்றம் நடந்திருக்கிறது என்று ஜெயின் ஆணையத்தின் விசாரணையில் வந்த குற்றச் சாட்டுகளை விசாரிக்காதது ஏன்? என்ற கேள்விகளை திருச்சி வேலுச்சாமி எழுப்பினார்.*

*“நான் இப்போதும் ஒரு காங்கிரஸ் காரர்தான்; காங்கிரஸ் கட்சியில் இருந்து கொண்டுதான் கேட்கிறேன்; ராஜீவ் கொலை விசாரணை நேர்மையாக முழுமையாக நடத்தப் பெறவில்லை. இதற்கு மறுவிசாரணை நடத்த வேண்டும். இந்த மூன்று தமிழர்களையும் தூக்கிலிடத் துடிப்பது உண்மைக் குற்றவாளிகளை மறைக்கவே உதவும். இந்த அநீதியை எனது மனசாட்சி ஏற்கவில்லை. எனவே மனம் திறந்து பேசி வருகிறேன்” - என்று கூறினார். ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக இந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ந்தது. பேட்டியின்போது தெரிவித்த கருத்துகள் பத்திரிகையாளர்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. கேட்கப்பட்ட அனைத்துக் கேள்விகளுக்கும் உரிய விளக்கங்கள் தரப்பட்டன. மே 17 இயக்கத்தின் சார்பில் அதன் அமைப்பாளர் திருமுருகன் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார். மும்பாய் ‘விக்டோரியா முனையம்’ பகுதியில் அமைந்துள்ள பத்திரிகையாளர் அரங்கில் 1.11.2011 அன்று மாலை 3.15 மணியிலிருந்து 5 மணி வரை இந்த சந்திப்பு நடந்தது. மும்பாய் பெரியார் திராவிடர் கழக அமைப்பாளர் கதிரவன் இந்த நிகழ்வுக்கு உரிய ஏற்பாடுகளை செய்திருந்தார்.*

**புதிய தலைமையகத்தின் தொலைப்பேசி எண்**

**தலைமைக் கழக முகவரி:** 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மைலாப்பூர், சென்னை-600004. தொலைபேசி: **044-24980745**

**நன்கொடை**


*ஈரோடு மாவட்டம் கோபி நகர கழகத் தோழர் நிவாசு-மணிமொழி ஆகியோரின் ஆண் குழந்தைக்கு கழகத் தலைவர் அறிவுக்கனல் எனப் பெயர் சூட்டினார். நிகழ்வில் புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)*

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 10th November 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | நவ. 17, 2011 | புரட்சி 10 | முழக்கம் 44 | விலை: ரூ.2.50


## அரசு அலுவலகங்களில் ஆயுத பூசைகள் நிறுத்தம்: கழகத்தின் வெற்றி

அரசு அலுவலகங்களில் ஆயுத பூசைகள் நடத்துவது அரசு ஆணை மற்றும் விதிமுறைகளுக்கு எதிரானது என்பதை சுட்டிக்காட்டி, கழக சார்பில் காவல்துறை தலைமை இயக்குநருக்கும், தமிழக அரசின் தலைமை செயலாளருக்கும் மனுக்கள் தரப்பட்டன. உயர்நீதி மன்றத்திலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழக சார்பில் வழக்கு தொடர்ந்திருந்தார். ஏற்கனவே மதுரை உயர்நீதி மன்றத்திலும் அரசு ஆணைகளைப் பின்பற்றி நடக்குமாறு இது தொடர்பான வழக்கில் 17.3.2010 அன்று உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து தமிழக அரசின் நிர்வாக சீர்திருத்தத் துறையின் சார்பில் அதன் துணை இயக்குநர் எம்.கண்ணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு அதிகாரபூர்வமாக பதில் அனுப்பியுள்ளார்.

அதில், “மதுரை உயர்நீதிமன்றத்தின் 17.3.2010 ஆணைப்படி அரசுத் துறைகளுக்கு (ஆயுத பூசைகளைத் தவிர்க்கும்படி) அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது பெரியார் திராவிடர் கழகத்தின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும். அரசு அனுப்பியுள்ள கடிதத்தின் நகலை கீழே வெளியிட்டுள்ளோம்:



# கூடங்குளம்: விஞ்ஞானிகள் எழுப்பும் கேள்விகள்

கூடங்குளம் அணுஉலைகளை எதிர்க்கும் விஞ்ஞானிகள், கீழ்க்கண்ட கேள்விகளுக்கான விளக்கங்களை அணுஉலை ஆதரவு விஞ்ஞானிகளிடம் கேட்டுள்ளனர்.

1. அணு உலை அமைந்துள்ள இடம்.
2. அணு உலையின் தொழில்நுட்ப வடிவமைப்பு விவரம்.
3. அணு உலையின் செயல்திறன் அறிக்கை.
4. எரிபொருள் நிரப்புவது எப்படி?
5. யுரேனிய எரிபொருள் வாங்கும் முறை; எங்கிருந்து வாங்கப்படுகிறது?
6. எரிபொருட்களை கொண்டு வரும் பாதைகள் மற்றும் போக்குவரத்து குறித்த விவரம்.
7. தண்ணீர் எங்கிருந்து எடுக்கப்படுகிறது. அதன் பாதைகள் குறித்த விவரம்.
8. அணுக் கழிவுகள் அகற்றுதல் மற்றும் கையாளும் தொழில்நுட்பம்.
9. அணு மறு சுழற்சி குறித்த விவரம்.
10. அணு மறுசுழற்சி நிலையம் குறித்த விவரம்.
11. குளிர்நீர் வெளியேற்றும் தொழில்நுட்பம்.
12. மன்னார் வளைகுடா பகுதிக்கான பாதுகாப்பு.
13. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளுக்கான பாதுகாப்பு.
14. பயங்கரவாத அச்சுறுத்தல் தடுப்பு நடவடிக்கை.
15. இத்திட்டத்தால் சீனா, இலங்கை, மாலத்தீவு, பாகிஸ்தான் நாடுகள் இடையிலான நட்புறவு மாற்றம் குறித்த விவரம்.
16. எரிபொருளுக்கான கனிம சுரங்கங்கள், அதை தோண்டுவதால் ஏற்படும் விளைவுகள்.
17. ரஷ்யா - இந்தியா இடையிலான நட்புறவு ஒப்பந்த விவரம்.
18. ராணுவ கண்காணிப்பு விவரம்.
19. அணு உலையின் தொழில்நுட்ப விவரம் மற்றும் அதற்கான மொத்த செலவு விவரம்.
20. கடல் பாதுகாப்பை பலப்படுத்துவது எப்படி?
21. கடல் வழி பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு விவரம்.
22. ராணுவம் பணியமர்த்தப்படும் பகுதிகள் எவை?
23. மீதமுள்ள நான்கு உலைகள் கட்டுவதற்கான ஒப்பந்த விவரம்.
24. அணு எரிபொருள் வழங்கும் நாடுகளிடையேயான ஒப்பந்த விவரம்.
25. ஆயுதங்கள் தயாரிக்கப்படுமா என்பது குறித்த விவரங்கள்.
26. சுற்றுச் சூழல் பாதிப்புகள் குறித்த அறிக்கை.
27. கடலோர ஒழுங்குமுறை விதிகளை மீறிய விவரம்.
28. பொது கருத்துக் கேட்பு நடத்திய விவரம்; அறிக்கை.
29. கட்டுமான தரம் மற்றும் நம்பகத் தன்மை.
30. ஒப்பந்தக்காரரின் செயல்பாடுகள்.
31. வேலை வாய்ப்பு அளிக்கும் விவரம்.
32. பேச்சிப்பாறை மற்றும் தாமிரபரணி தண்ணீரை பயன்படுத்தும் விவரம்.
33. கடல் நீரை சுத்திகரிக்கும் தொழில்நுட்பம் மற்றும் விளைவுகள்.
34. கதிரியக்க பாதுகாப்பு முறைகள்.
35. அணுஉலை இயக்கத்தில் வெளியேறும் மாசு குறித்து விவரம்.
36. அணு உலை பகுதிகளில் மக்கள் வாழும் முறை
37. கடலியல் விவரம்.
38. மீனவர்களுக்கான பாதுகாப்பு.
39. நிலப்பகுதியில் மாற்றம் ஏற்படுமா?
40. இயற்கை பேரிடர் மேலாண்மை விவரம்.
41. அவசர பாதுகாப்பு நடவடிக்கை விவரம்.
42. மின்சாரம் உற்பத்தி மற்றும் கொண்டு செல்லும் வழி.

## 13,500 குடும்பங்களை வீதியில் நிறுத்திய முதல்வர் ஜெயலலிதா

தி.மு.க. ஆட்சியில் நியமிக்கப்பட்டவர்கள் என்பதற்காகவே 13,500 மக்கள் நலப் பணியாளர்களை ஒரே உத்தரவில் வேலை நீக்கம் செய்துள்ள தமிழக முதல்வரின் முடிவு மிக மோசமான, மக்கள் விரோத நடவடிக்கையாகும். இந்த ஊதியத்தை நம்பியே குடும்பம் நடத்திய இந்த 13,500 குடும்பங்களை வீதியில் நிறுத்துவதற்குத்தான் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தாரா? சர்வாதிகார ஆட்சிகள்கூட செய்யத் துணியாத இந்தக் கொடூரங்கள் ஒரு ஜனநாயக ஆட்சியில் நடப்பது பெரும் அவலமாகும். இவர்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஏழை மக்கள். பார்ப்பனர்களாகவோ மேல்தட்டு வர்க்கத்தினராகவோ இருந்திருந்தால் இப்படி எல்லாம் நடக்குமா? ஆட்சிகளால் பந்தாடப்படுவதற்கே இந்தப் பணியாளர்கள், பிறந்தவர்களா? உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை ஆறுதலைத் தந்தாலும், இத்தகைய அதிகார ஆணவங்களை மக்கள் சகித்துக் கொள்ள மாட்டார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## ஈரோட்டில் ஒரு நாள் கொள்கைப் பயிற்சி வகுப்பு

ஈரோடு மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக புதிய தோழர்களுக்கான பெரியாரியல் மற்றும் கழக அறிமுக வகுப்பு 30.10.2011 ஞாயிற்றுக் கிழமையன்று ஈரோடு மாவட்ட ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தின் மேல் தளத்தில் நடை பெற்றது.

பயிற்சி வகுப்பினை நாடாளுமன்ற உறுப்பினர் கணேச மூர்த்தி துவக்கி வைத்து உரையாற்றினார். காவை. இளவரசன் தோழர்களுக்கு மந்திரமல்ல, தந்திரமே! என்ற நிகழ்ச்சியினை நடத்தி, சாமியார்கள் மோசடி பற்றி விளக்கினார். மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் உலகம் தோன்றிய வரலாறு, உயிர்கள் உருவான பரிணாம வளர்ச்சி ஆகியவற்றை விளக்கினார்.

மதிய உணவு இடைவேளைக்கு பின் ‘பீ’ மற்றும் சாதிய கொடுமைகளைப் பற்றி விளக்க குறும்படம் வெளியிடப்பட்டது. குறும்படத் திற்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சாதி ஒழிப்பு, கடவுள் மறுப்பு, பெண் அடிமை, பொதுவுடைமை, தனித் தமிழ்நாடு ஆகியவற்றின் பெரியாரின் பார்வையும், மற்ற தலைவர்களின் பார்வையும் ஒப்பிட்டு விளக்கினார்.

பயிற்சி வகுப்பில் ஏராளமான கல்லூரி மாணவர்களும், புதிய தோழர்களும் கலந்து கொண்டனர். பயிற்சி வகுப்பிற்கான ஏற்பாடுகளை ஈரோடு மாநகர தோழர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஓட்டம் பிடித்தார், ம.பொ.சி. மலையாளிகளை துணிவுடன் எச்சரித்தவர் பெரியார்

# குமரி மாவட்ட மீட்புப் போராட்டத்தில் பெரியாரின் பங்கு

*கன்னியாகுமரி தமிழகத்தோடுதான் இணைக்கப்பட வேண்டும் என்று தளபதி நேசமணி தலைமையில் நடந்த போராட்டத்தில் பெரியாரின் பங்கு இருட்டடிக்கப்படுகிறது. பெரியார் மீது அவதூறுகளை வீசவும் ஒரு கூட்டம் காத்திருக்கிறது.*

குமரி மாவட்ட மீட்புப் போராட்டத் தளபதி நேசமணி பற்றி - 'நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்' என்ற நூலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் ரசாக் எழுதியுள்ளார். அந்நூலுக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.சுவாமிதாஸ் எழுதிய அணிந்துரையை இங்கு வெளியிடுகிறோம். அடக்கு முறைகளைக் கண்டு அஞ்சி, ம.பொ.சி., அரசுக்கு பயந்து சொற்பொழிவு ஆற்றாமலே ஓட்டம் பிடித்தார் என்ற உண்மையையும், பெரியார் மலையாளிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துப் பேசியதையும் இந்த அணிந்துரையில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஏ.சாமிதாஸ் பதிவு செய்துள்ளார். அவர் எழுதிய அணிந்துரை:

"'பெரியவர்' என்றும், 'வக்கீல்' என்றும், 'மார்ஷல்' என்றும் 'குமரித் தந்தை' என்றும் அழைக்கப் பெறும் சிறப்புக்கு உரியவர் திரு.ஏ. நேசமணி. அவர் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை உருவாக்கிப் போராடும்போது நான் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தேன். கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும்போதே திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசில் செயற்குழு உறுப்பினராகவும் பிரச்சாரக் குழு உறுப்பினராகவும் இருந்தேன்.

கண்ணில் கண்டவர்களை, 'கண்டால் அறியாம் பள்ளி' என்று கூறிக் கைது செய்தனர். நான் போலீசுக்குப் பிடி கொடுக்காமல் வாழ்ந்தேன். திருவிதாங்கூரில் நடந்த தமிழகப் போராட்டத்தில் போலீஸ் அத்துமீறிச் செயல்பட்டது. பலரைத் துப்பாக்கிக்கு இரையாக்கியும் பலரைச் சித்திரவதை செய்தும் பலரைத் துன்புறுத்தியும் கைது செய்தனர். **தமிழ்க் கூட்டங்களில் சொற்பொழிவு ஆற்ற வந்த ம.பொ.சி. சொற்பொழிவு ஆற்றாமலேயே அரசுக்குப் பயந்து திரும்பிச் சென்றார்.**

**ஆனால், பெரியார் ஈ.வெ.ரா. மட்டும் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் நிலைமையை மார்ஷல் நேசமணியிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். இதன் பின்னணியாகச் சென்னை மெரினா கடற்கரையில் ஒரு கூட்டத்தைப் போட்டு, "திருவிதாங்கூரில் போலீஸ் அடக்கு முறையை உடனடியாக நிறுத்தா விட்டால், தமிழகத்தில் வாழும் மலையாளிகளை நாங்கள் இங்கிருந்து அடித்துத் துரத்துவோம்" என்று பொதுக் கூட்டத்தில் அறிக்கை விட்டார். மலையாள அரசு தமிழனைத் துன்புறுத்தியதை நிறுத்தியது.**

**மார்ஷல் நேசமணி தன் கையால் மாலை அணிவித்த ஒரே தலைவர் பெரியார் தான்.** பெரியாரும் மார்ஷல் நேசமணி மீது மிக்க மதிப்பு வைத்திருந்தார். திருவிதாங்கூர் தமிழர் போராட்டத்தில் மார்ஷல் நேசமணிக்குப் பொருளுதவி செய்தவர் பயோனியர் குமாரசுவாமி. டாக்டர் மத்தியாஸ், கட்டுக்கடை தேவசகாயம் ஆசான் ஆகியோர் மருத்துவ உதவி செய்தனர்.

திரு. கோலப்பா பிள்ளை நாஞ்சில் நாடு வங்கி நிறுவனர். இவருடைய நெருங்கிய நண்பர். குமரித் தந்தை வழி நாம் போராடி தமிழ் நாட்டுடன் இணைந்தோம். அந்தப் போராட்டத்தைப் பற்றி அவருடன் இணைந்து போராடிய ஜனாப் அப்துல் ரசாக் முன்னாள் எம்.பி. எழுதிய 'நேசமணி ஒரு சரித்திரத் திருப்பம்' என்ற நூல் வெளி வருவதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். அதனைப் பல்வகை சிரமத்தின் மத்தியில் பதிப்பித்து வெளியிடும் பேராசிரியர் டாக்டர் மு. ஆல்பென்ஸ் நதானியேல் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறேன். இந்நூல் நறுமணம் மிக்கதாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

- ஏ. சுவாமிதாஸ், பி.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., நுள்ளிவிளை, 15.08.1998.

*1998 நவம்பர் மாதம் நாகர்கோயில் பயோனியர் குமாரசாமிக் கல்லூரி பேராசிரியர் முனைவர் மு.ஆல்பென்ஸ் நதானியேல், தமது 'தமிழ்க்குடில்' பதிப்பகத்தின் சார்பில் இந்த நூலை வெளியிட்டுள்ளார்.*

# '7 ஆம் அறிவு' திரைப்படம் – தமிழனுக்குப் பெருமையா?

"பழந்தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன? - என்பது போன்ற கேள்விக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக, அந்தப் பேரில் பிழைக்கவோ, பெருமைப் படவோ, மக்களைச் சுரண்டவோ தங்கள் எண்ணத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவோ பயன்படுத்தப்படுகிறது" என்றார் பெரியார். அப்படி பழந்தமிழர் பெருமை என்ற ஒன்றைச் சொல்லி மக்களைச் சுரண்டும் முயற்சியே 7 ஆம் அறிவு திரைப்படம்.

5 ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் இருந்து சீனா சென்ற போதி தர்மன் பற்றிய ஒரு கதை. தமிழர்களின் பெருமையை பறைசாற்றினான், குங்பூ கலையை உலகிற்கு அறிமுகப்படுத்தினான். தமிழ் மருத்துவத்திற்குப் பெருமை சேர்த்தான் என்றெல்லாம் பெருமைகளை ஏற்றுகிறது இத் திரைப்படம். மிக முக்கியமான உண்மை என்னவென்றால் போதி தர்மன் தமிழனே இல்லை என்பதுதான்.

திரைப்படக் குழுவினர் சொல்லும் கதைப்படியான போதிதர்மன், சீனா சென்ற காலம் கி.பி.520 அல்லது 525. அந்தக் காலக்கட்டத்தில் பல்லவ நாடு தனிநாடாக இயக்கி வந்தது. அதற்கு அருகாமை நாடுகளான சேர, சோழ, பாண்டிய நாடுகளை களப்பிரர்களும், பல்லவ நாட்டுக்கு வடக்கே இரேணாட்டு தெலுங்குச் சோழர்களும் அரசாண்டனர். போதி தர்மனின் இயற்பெயர் புத்தவர்மன். இவன் ஸ்கந்தவர்மன் என்ற பல்லவ அரசனுக்கு மூன்றாம் மகன் என்று சொல்லப்படுகிறது. அப்போதைய தமிழ் மன்னர்களின் பெயர்கள் நெடுஞ்செழியன், கரிகாலன், செங்குட்டுவன், இளந்திரையன் என்பது போல சுத்தத் தமிழ்ப் பெயர்களில் தான் இருந்தன. போதி என்ற வடமொழிச் சொல்லுக்கு அரச மரம் என்று பொருள். ஸ்கந்தவர்மன் என்றோ, போதிவர்மன் என்றோ, குமாரவிஷ்ணு, சிம்ம விஷ்ணு என்றோ வடமொழிப் பெயரை தமிழ் மன்னன் சூடிக் கொள்ள அப்போது வாய்ப்பில்லை. பல்லவர்கள் தமிழர்களே அல்ல. வடக்கிலிருந்து வந்தவர்கள் என்பதுதான் பல வரலாற்று அறிஞர்களின் ஆய்வு முடிவு. பல்லவர்களின் மொழி ப்ராகிருதமும், சமஸ்கிருதமுமே அவர்களின் செப்பேடுகளும், கல்வெட்டுக்களும் ப்ராகிருதத்திலேயே உள்ளன. அவர்களின் ஆட்சி மொழிகள் வடமொழிகளே.

வேறு சில வரலாற்றுக் குறிப்புகள் போதி தர்மன் ஒரு பார்ப்பன குறுநில மன்னனுக்குப் பிறந்தவன் என்று குறிப்பிடுகின்றன. 'கருஞ்சட்டைத் தமிழன்' 23.04.10 இதழில் தோழர் எழில் இளங்கோவன், புத்தமதத்தில் ஊடுருவிய பார்ப்பனர்களான சங்கமித்திரா, ஆச்சாரிய புத்ததத்தா, கணதாசர், வேணுதாசர், போதி தருமர், தருமபாலா, ஆச்சாரிய தருமபாலா, தம்மபாலா போன்றவர்கள் பவுத்தத் துறவிகளாக மாறி, புத்தரின் நேரடி பவுத்தத்தை மாற்றி அமைத்ததையும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் நாகார்ஜுனா என்பவர், புத்தருக்கு நேர் எதிரான ஆரிய வாதத்தைச் சூனிய வாதமாகச் சொல்லி மகாயான பவுத்தத்தை நிறுவி, புத்தர் உருவாக்கிய பவுத்தத்தை வீழ்த்தியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு தோழர் எழில் இளங்கோவன் சொல்வது மட்டுமல்ல, கேரளாவில் களரிப்பட்டு அல்லது களரிப் பாயாட்டு என்ற கலையை

4 ஆம் பக்கம்

### பழந்தமிழர் பெருமை குறித்து பெரியார் கூறுகிறார்

*"பழந்தமிழன் யார்? அவன் கொள்கை என்ன? அதற்கு ஆதாரம் என்ன? அதற்கு இன்று அவசியம் என்ன? – என்பது போன்ற கேள்விக்குப் பதில் சொல்ல இன்று ஆளைக் காணோம். வீணாக, அந்தப் பேரில் பிழைக்கவோ, பெருமைப்படவோ, மக்களைச் சுரண்டவோ தங்கள் எண்ணத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவோ பயன்படுத்தப்படுகிறது.*

*பழந்தமிழன் யாராயிருந்தால் எனக்கென்ன? உங்களுக்குத் தான் என்ன காரியமாகும்? அவன் கொள்கையோ, மதமோ, கடவுளோ, நடப்போ, சக்தியோ எதுவாயிருந்தால்தான் இங்கு இன்று நமக்கு என்ன லாபம்? என்பதுதான் எனது கேள்வி.*

*பழந்தமிழர் நிலையைப் பற்றிப் பேசுபவர்கள் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுக்கும் அறிவாளிகளானால், நடுநிலைக்காரர்களானால், அவர்களை ஒன்று கேட்கிறேன். அதாவது காட்டுமிராண்டி வாழ்க்கைக்கால மனிதனைவிட கல்லாயுத கால வாழ்க்கை மனிதன் சிறந்தவன் அல்லவா என்பதும், அதுபோலவே 4000, 5000 வருடத்திற்கு முன் இருந்த மனிதனைவிட இன்று இருபதாவது நூற்றாண்டில் வாழும் மனிதன் சிறிதாவது மேலான அனுபவம் பெற சவுகரியமும், ஆராய்ந்து பார்க்கும் வசதியும் உடையவனா? அல்லவா? என்பதோடு அந்தக் காலத்தில் வாழ்ந்த வாழ்வைவிட, எண்ணிய எண்ணத்தைவிட வேறான வாழ்வும், வேறான எண்ணங்களும் கொள்ள வேண்டியவனாய் இருக்கின்றானா இல்லையா என்பதேயாகும்.*

*இன்று வாழும் மனிதனுடைய எந்தக் காரியத்திற்கு பழந்தமிழனுடைய வாழ்க்கைக் குறிப்பும் நினைவுக் குறிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது என்று உங்களை வணக்கமாய்க் கேட்கிறேன்.*

*வீணாக பழந்தமிழர் கொள்கை என்பதும் பழந்தமிழர் வாழ்க்கை நிலை என்பதும் அந்நியன் ஏய்க்கவோ, அறியாமையில் மூழ்கவோ தான் பயன்படுத்தக் கூடியதாக ஆகிவிட்டது.*

*இனி, நம்முடைய எந்த சீர்திருத்தத்திற்கும் அந்தப் பேச்சு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பகுத்தறிவாதியின் கடமையாக ஆகிவிட்டது. பழந்தமிழன் வந்து போதிக்கத் தகுந்த நிலையில் இன்று நமது மனித சமூகம் இல்லை.*

*பழந்தமிழன் கொள்கை எதுவும் இன்று எந்த மனித சமூகத்திற்கும் அவசியமும் இல்லை. மனிதன் காலத்தோடு, மாறுதலோடு, செல்ல வேண்டியவனேயொழிய வேறில்லை. வேண்டுமானால் மடையர்களைத் தட்டி எழுப்ப ஆயுதமாக அதைக் கொள்ளலாம். ஆனால் சாது மக்களை ஏமாற்ற அதைப் பயன்படுத்தவிடக் கூடாது.*

***– பெரியார், 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற நூலில்***

# ஈழத்தில் ராஜீவ் நிகழ்த்திய போர்க் குற்றங்கள் (6)

*ராஜீவ் காந்தி ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம் 1987 ஆம் ஆண்டில் நிகழ்த்திய போர்க் குற்றங்கள், இனப் படுகொலைகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

**26.10.87**

இன்று காலை 10 மணியளவில் பொன்னாலைப் பாலத்தில் இந்திய கெலிகாப்டர் புதிய வகை ராக்கட் மோட்டார்களை வீசித் தாக்கியது. தமது உடைமைகளை இழந்து அகதிகளாக வெளியேறிய பொது மக்கள் மீது இந்திய கெலிகாப்டர் 5 ராக்கட் மோட்டார்களை வீசியதில் ஒரு சிறுவன் உட்பட 5 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமடைந்தனர். இரண்டு பேர் கால்களை இழந்தனர். இரு மினி பஸ்களும் சேதமடைந்தன.

காலை கொக்குவில் சந்தி, பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களில் இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடந்த கடும் சண்டையில் விடுதலைப் புலிகளால் 2 எல்.எம்.ஜீ., 4 எஸ்.எல்.ஆர்., 4 எஸ்.எம்.ஜீ., ஒரு பசூக்கா ராக்கட் லோஞ்சர் என்ற இந்தியப் படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

கொக்குவில் சந்தியில் பீரங்கி பூட்டிய இராணுவ டிரக் ஒன்றிலிருந்து விடுதலைப் புலிகள் ராக்கட் லோஞ்சர் கொண்டு தாக்கியதில் அந்த வாகனம் முற்றாகச் சேதடைந்தது. அதில் வந்த இந்தியப் படையினர் அனைவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பேராறு என்னும் இடத்தில் இருந்த விடுதலைப் புலிகளது முகாமொன்றை சிங்கள இராணுவத்தினர் சுற்றி வளைத்துத் தாக்கினர். காலை 11 மணியளவில் நடைபெற்ற இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஆயுத இழப்பு ஏதும் ஏற்படவில்லை.

### இந்திய இராணுவத்தின் கைதுகள்

***இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வரும் 'ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்' என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு, இலங்கையில் தமிழ் பகுதிக்கு ராஜீவ் காந்தி, 'இந்திய அமைதிப் படை' என்ற பெயரில் அனுப்பி வைத்த ராணுவம் நடத்திய அத்துமீறல்கள், போர்க் குற்றங்களை நேரில் சென்று ஆய்வு நடத்தி, 1989 ஆம் ஆண்டு மே மாதம் அறிக்கையாக வெளியிட்டது. அந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:***

வடக்கு-கிழக்கில் நூற்றுக்கணக்கான மக்களை இந்திய அமைதிப் படை கைது செய்து, அவர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே உள்ள உறவு பற்றி விசாரித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் என்று சந்தேகப்படுபவர்கள் நூற்றுக்கணக்கிலும் மற்ற தமிழ் இயக்கங்களைச் சேர்ந்த சிலரும் இன்றும் இந்திய அமைதிப் படையின் காவலில்தான் இருக்கிறார்கள். இவர்கள் இந்திய சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்களா அல்லது சிறீலங்கா சட்டத்தின் கீழா என்று இந்திய அதிகாரிகள் இதைப் பற்றி ஏதும் கூறவில்லை. கைது செய்யப்பட்டவர்கள் மீது எந்தவிதமான குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை. எவ்வித விசாரணையும் நடக்கவில்லையெனக் கூறப்படுகிறது.

பரமேஸ்வரன் கெங்கா என்பவர் 1988 ஏப்ரல் 5 அன்று இந்திய அமைதிப் படையால் கைது செய்யப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், அவர் "மாயமாய்" மறைந்து விட்டார். இதைத் தொடர்ந்து அவரது சகோதரி ஒரு 'ஹாபியஸ் கார்பஸ்' மனுவை தாக்கல் செய்தார். வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப் படை முகாமிற்கு பொறுப்பேற்றிருக்கும் இந்திய இராணுவ அதிகாரியை நீதிமன்றத்திற்கு வரும்படி 'சம்மன்' பிறப்பிக்கப்பட்டது. பலமுறை 'சம்மன்' அனுப்பிய பிறகும் அவர் வரவில்லை. இந்திய அதிகாரிகள் இந்த வழக்கு சம்பந்தமாக எந்தவிதத் தகவல்களையும் தர மறுத்துவிட்டனர்,. நீதிமன்றத்தை உதாசீனப்படுத்தியதாக அந்த அதிகாரி மீது ஒரு வழக்கு தொடரப்பட்டிருந்தாலும் "மாயமாய்" மறைந்துபோனவரைப் பற்றிய எவ்விதத் தடயமும் கிடைக்கவில்லை. ஒப்பந்தத்தை ஆதரிக்கும் 'த்ரீ ஸ்டார் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். குழுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என சந்தேகப்படுபவர்களை அடையாளம் காட்ட உதவுவதாகக் கூறப்படுகிறது.

வேறு சில தகவல்கள்படி தமிழீழ விடுதலைப் புலிகள் என சந்தேகப்படுபவர்களை, இந்தக் குழுக்கள் இந்திய அமைதிப் படையின் உதவியுடன் கென்றதாகவும் கூறப்படுகிறது. இந்திய அமைதிப் படையால் தேடப்பட்டுவரும் நபர்களைப் பிடிப்பதற்காக குறிப்பிட்ட நபர்களின் உறவினர்களைப் பிணைக் கைதிகளாக இந்தி யஅமைதிப் படை கைது செய்ததாகவும் கூறப்படுகிறது. காவலுக்கு எடுத்துச் சென்றவுடனேயும், அதன் பிறகும் அவர்கள் அடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. வீடுகளில் நடைபெறும் "வழக்கமான விசாரணைகள்" போதும் தேடப்படும் நபர்களின் உறவினர்கள் தாக்கப்பட்டிருக்கின்றனர். கீழ்க்கண்ட வாக்கு மூலம் இதற்கு ஒரு உதாரணம்:

"நான் ஒரு விவசாயி. என்னுடைய சகோதரரின் நிலத்தில் காய்கறி பயிரிட்டு வருகிறேன். என்னுடைய நிலத்தில் பிப்ரவரி 5 ஆம் தேதியன்று, காலை 8.45 மணிக்கு வேலை செய்து கொண்டிருந்தபோது இரண்டு பொது மக்களுடன் நான்கு இந்திய அமைதிப் படையினரும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். இந்திய அமைதிப் படையினர் சீருடையில் ஆயுதம் ஏந்தி வந்திருந்தனர். இந்திய அமைதிப் படையினரில் ஒருவன், நான் சாகுபடி செய்யும் நிலத்தில், எங்கு ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டான்.

எனது தோட்டத்தில் ஆயுதமேதும் இல்லை என கூறியவுடன், இந்திய அமைதிப் படையினர் அவர்களுடன் வந்த இரண்டு பொது மக்களைக் கொண்டு, என்னைத் தாக்கும்படி கடடளையிட்டனர். இந்திய அமைதிப் படையினர் எனது சகோதரன் எங்கிருக்கிறான் என்று கேட்டனர். உடனிருந்த இரண்டு நபர்களும் தடிகளைக் கொண்டு என்னைத் தாக்க ஆரம்பித்தனர். 'பம்ப் செட்' அருகே இருந்த மண்வெட்டியின் பிடியைக் கழற்றி என் வலது காலைத் தாக்கியதால், நான் கீழே விழுந்தேன். இந்திய அமைதிப் படையினரும் அவர்களுடன் வந்த இரண்டு நபர்களும் சென்ற பிறகு, பக்கத்துத் தோட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றொரு சகோதரனிடம் இதைப் பற்றித் தெரிவித்தனர். அன்றே என்னை அவர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து, யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து, யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைக்கு, 'ஆம்புலன்ஸ்' மூலம் கொண்டுச் செல்லப்பட்டேன். 18 நாட்கள் மருத்துவமனையில் நான் தங்கியிருந்தேன். இந்தத் தாக்குதலால் எனது கால் எலும்பு முறிந்துவிட்டது."

இந்திய அமைதிப்படை பொது மக்களை ஒன்று திரட்டி, முகமூடி யணிந்தருந்த அல்லது மறைத்து வைக்கப்பட்ட, 'காட்டிக் கொடுப்பவர்'களுக்கு முன்னால் வரும்படி செய்தனர். இந்தக் 'காட்டிக் கொடுப்பவர்கள்' விடுதலைப் புலிகளுடன் உறவு வைத்திருப்பவர்கள் என்று கருதப்படுபவர்களை அடையாளம் காட்டுகின்றனர். இந்த அடையாளம் காட்டும் நடவடிக்கையைப் பார்த்த ஒருவர் அதனை விவரிக்கிறார்.

"நான் 'ஒய்'யின் மனைவி. 8.9.1988 அன்று இந்திய அமைதிப்படையால் கைது செய்யப்பட்ட என் கணவர் எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. செப்டம்பர் 7 ஆம் தேதியன்று என் கணவர் வீட்டிற்கு 200 மீட்டர் தொலைவில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இந்த சம்பவத்தில் இந்திய அமைதிப் படையின் இரு சிப்பாய்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாகக் கூறப்படுகிறது. மறுநாள் இந்திய அமைதிப்படை இந்தப் பகுதியில் இருந்த எல்லா வீடுகளையும் சோதனை போட்டு, திடகாத்திரமான எல்லா ஆண்களையும் கைது செய்ய ஆரம்பித்தனர். 8.9.1988 அன்று எங்கள் வீட்டிலிருந்த இரண்டு ஆண்களும் (என் கணவரும், அவரின் மைத்துனரும்) கைது செய்யப்பட்டனர். நானும் என் மாமியாரும் அவரது ஏழு மகள்களும் அவர்கள் கைதானதைப் பார்த்த சாட்சிகள். இந்திய அமைதிப் படையினர் அன்றைய தினம் காலை பத்து மணிக்குள் கைது செய்தவர்களை விடுவித்து விடுவோம் என்ற கூறினர். பகல் ஆகியும் என் கணவரும் அவர் மைத்துனரும் வராததால், மற்ற பெண்களுடன் சேர்ந்து இந்திய அமைதிப்படை முகாமிற்கு சென்றேன்.

அங்கு சென்ட்ரி அறையிலிருந்து ஒருவர் முன்னால், கைது செய்யப்பட்ட அனைவரும் அணிவகுத்து செல்லும்படி செய்யப்பட்டனர். சென்ட்ரி அறையிலிருந்தவர் சந்தேகத்துக்குரியவர்களை அடையாளம் காட்டிக் கொண்டு இருந்தார். கிட்டத்தட்ட 2000 ஆண்கள் அங்கு இருந்தனர். சுமார் பகல் 1.45 க்கு, என் கணவர் உடபட 15 பேர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டு 500 இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்பில் இந்திய அமைதிப் படையின் பிரதான முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்திய அமைதிப் படை சென்ட்ரி எங்களை ராணுவ முகாமிற்குள்விட மறுத்ததால், நான் வீட்டிற்குத் திரும்பினேன்." அன்றிலிருந்து இப்பெண்ணின் கணவர் "மாயமாய்" மறைந்து விட்டார். இந்திய அமைதிப்படை அவரைக் கைது செய்யவில்லை என்று கூறிவிட்டது.

இந்திய அமைதிப் படைக்குத் தகவல் தருபவர்கள் "மூன்று நட்சத்திரம்" மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பைச் சார்ந்தவர்கள் என்று சில தகவல்கள் கூறுகின்றன. அம்னஸ்டி இன்டர் நேஷனலுக்குக் கிடைத்த சில அறிக்கைகள்படி, எந்த இயக்கத்தையும் சாராத சிலரையும் இந்திய அமைதிப்படை பலவந்தமாக, தான் சந்தேகப்படுபவர்களைக் காட்டிக் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தியிருக்கிறது. இவர்களுக்குத் தங்களைக் காட்டிக் கொடுப்பவர்களைப் பற்றிய எந்த தகவலும் தெரிவதில்லை. இவர்களின் கருத்துப்படி, அவ்வாறு காட்டிக் கொடுக்கப்பட்டவர்கள் பின்னர் சித்தரவதைகளுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். உதாரணத்திற்கு, யாழ்ப்பாணம் புனித-மேரி கல்லூரியில் படிக்கும் 18 வயது மாணவருக்கு நேர்ந்த கதியைப் பார்ப்போம்:

"1988 மார்ச் 3, அன்று காலை சுமார் 9 மணிக்கு ஒரு ராணுவ வாகனம் எங்கள் வீட்டின் முன் வந்து நின்றது. அதிலிருந்து 6 இந்திய ராணுவத்தினரும் (இராணுவச் சீருடை) முகமூடி அணிந்த ஒருவரும் எங்கள் வீட்டிற்குள் நுழைந்தனர். ஒரு சிப்பாய் நான் அமர்ந்திருந்த அறைக்குள் வந்து என் தலைமுடியைப் பிடித்து தூக்கி முகத்தில் மூன்று குத்துக்களை விட்டான். பின்னர் அறையை விட்டுத் தரதரவென்று முகமூடியணிந்த மனிதருக்கு முன்னால் இழுத்து வரப்பட்டேன். அவர் 'ஆம்' என்பதுபோல் தலையசைக்க என்னை கல்வியங்காடு இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

அங்கு ஓர் அறையில் என்னைத் தள்ளிப் பூட்டினர். முகமூடியணிந்த மனிதரும் அதே அறைக்குள் அடைக்கப்பட்டார். அவர் இப்பொழுது முகமூடி அணிந்திருக்கவில்லை. எந்தப் போராளி குழுக்களுடனும் தொடர்பில்லாத என்னை ஏன் காட்டிக் கொடுத்தீர்கள் என அவரிடம் கேட்டபொழுது, இந்தியப் படையினரின் தீவிர அடியுதைகளுக்கு பலியானதால் யாராவது ஒருவரைக் காட்டிக் கொடுக்கும் கட்டாயத்திற்குதான் ஆட்பட்டதாகக் கூறினார். மறுநாள் ஆறு இந்தியப் படையினர் என் அறைக்குள் வந்து அடித்தும் உதைத்தும் கைகளை முறுக்கியும் என் தலையை சுவற்றில் முட்டியும் சித்திரவதை செய்தனர். மயக்கம் போட்டு விழும்வரை இந்த சித்திரவதை தொடர்ந்தது. மயக்கம் தெளிந்தவுடன் மீண்டும் தாக்க ஆரம்பித்தனர். முகமூடி மனிதருக்கு முன்னால் நடந்த இந்தத் தாக்குதல் சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்றது.

மார்ச் 5 ஆம் தேதியன்று என்னுடைய சாதாரண உடைகளைக் களைந்துவிட்டு இராணுவ சீருடையை அணிந்துக் கொள்ளும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டது. நான் இராணுவ சீருடையை அணிந்து கொண்டவுடன் கல்வியங்காடு இந்திய இராணுவ சென்ட்ரி தளத்தில் நிறுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளையும், அவர்களது ஆதரவாளர்களையும் அடையாளம் காட்டும்படி நிர்ப்பந்திக்கப் பட்டேன். நான் யாரையும் சுட்டிக்காட்டவில்லை.

### காவலில் சித்திரவதையும் இறப்புகளும்

ஏராளமான கைதிகள் நீண்டகாலமாக வெளியுலகத் தொடர்பின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். கைதிகள் மீது சிறீலங்கா இராணுவமும், இந்திய அமைதிப்படையும் கடுமையான சித்திரவதையைப் பிரயோகிப்பதாக பல தகவல்கள் கிடைத்துள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் காவலில் வைக்கப்பட்ட பலர் சித்திரவதையின் காரணமாக இறந்திருக்க வேண்டும் என்று அம்னஸ்டி இன்டர்நேஷனல் நம்புகிறது.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஈழ விடுதலையை வலியுறுத்தும் ஆங்கில நூல் வெளியீடு



சென்னையில் 12.11.2011 சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் ரான் ரைடனவர் எழுதிய, 'தமிழ் நேஷன் இன் ஸ்ரீலங்கா'எனும் நூலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் வெளியிட, பெரியார்திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பெற்றுக் கொண்டு, நூலை அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார். ரான் ரைடனவர் எழுதிய 'சவுண்ட்ஸ் ஆப் வெனிசுலா' என்ற நூலும், தோழர் அமரந்தா மொழி பெயர்த்த 'வெனிசுலாவின் ஓசைகள்' என்ற நூலும் விழாவில் வெளியிடப்பட்டன. இந்திய கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலாளர் சி.மகேந்திரன், எழுத்தாளர் அமரந்தா, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தியாகு, ஆசிரியர் ரான் ரைடனவர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் ஆர். நல்லகண்ணு படத்தில் உள்ளனர்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பயிற்றுவிக்கும் பல பயிற்சி மையங்கள் உள்ளன. அவற்றின் விளம்பரங்களில் களரிப்பாயாட்டுக் கலையை உருவாக்கிய போதி தர்மன் ஒரு மலையாளி என்றும் (அப்போது சேர நாடு) ஒரு பார்ப்பன மன்ன னுக்கு மூன்றாவதாகப் பிறந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ஆதாரம்:;http://maruthikalari.org/english/kalari.htm)

இது மட்டுமல்ல திரைப்படக் குழுவினர் கூறும் ஆதாரங்களைத் தேடினாலே போதி தர்மன் ஒரு தமிழன் அல்ல, ஒரு சேர நாட்டுப் பார்ப்பான் அல்லது வடநாட்டுப் பார்ப்பான் என்பதற்கே ஆதாரங்கள் உள்ளன.

பௌத்த மார்க்கத்திலிருந்து வேறுபட்ட தியான மார்க்கத்தைத் தான் போதி தர்மன் சீனாவில் போதித்துள்ளான். சீனாவில் சான் மதமாகவும், ஜப்பானில் ஜென் மதமாகவும் மக்களால் கடைபிடிக்கப்படுகிறது. இவை இந்து மதத்தைக் கட்டி எழுப்பிய சங்கரரின் அத்வைதக் கோட்பாடுகளுக்கு நெருக்கமாக உள்ளன. ஜப்பானிலும் இந்தியாவில் உள்ளது போன்ற ஒரு ஏற்றத்தாழ்வு நிலை, சாதி போன்ற ஒரு ஒடுக்குமுறை வடிவம் சில பகுதிகளில் இன்றும் உள்ளன.

ஆக, புத்தமதத்தை ஒழிக்க சில பார்ப்பனர்கள் அந்த மதத்துக்குள்ளேயே புகுந்து அது பரவிய இடங்கள் எல்லாவற்றிற்கும் தாங்களும் பரவி அழித்துள்ளார்கள். 'பகையாளி குடியை உறவாடிக் கெடு' என்று கிராமங்களில் சொல்வார்கள். அப்படி ஒரு வேலையைப் பார்த்த நயவஞ்சகனை கதாநாயகனாக உலவ விட்டுள்ளார் முருகதாஸ்.

வீட்டுக்கு முன்பு மாட்டுச் சாணியால் வாசல் தெளித்து, கோலம் போட்டு, தலைவாசலின் நிலைக் கதவின் கீழே மஞ்சளும் குங்குமமும் வைத்து, வீட்டுக்குப் பின்னே துளசிச் செடியும் இருப்பது யாருடைய வீட்டில்? பார்ப்பனர்களுடைய வீட்டில் தான் இவை தவறாமல் நடக்கும். அந்த பார்ப்பன வாழ்வியலைத் தான் தமிழர்களுக்கு முன் மாதிரியாக கடைபிடிக்க வேண்டிய கடமையாக முழங்குகிறார் முருகதாஸ். இதைத்தான் இந்து முன்னணி பேசுகிறது, சங்கராச்சாரி பேசுகிறார். இந்த சாணி, மஞ்சள், துளசி கதைகளை பக்தியாகச் சொல்லக் கூடாதாம்! அறிவியலாகச் சொல்ல வேண்டுமாம்! அந்தப் பித்தலாட்ட அறிவியலைத்தானே ஜக்கி வாசுதேவும், வேதாத்திரி மகரிஷியும், ரவிசங்கரும், நித்தியானந்தாவும் அவரவர் முறைகளில் நவீன தொழில்நுட்பங் களுடன் சொல்லி பல தலைமுறைகளுக்குச் சொத்து சேர்த்துள்ளார்கள்?

சாணியில்கூட பசுமாட்டுச் சாணி, எருமை மாட்டுச் சாணி என்று பிரிவினையை வைத்திருக்கும் சமுதாயத்தில், எந்தப் பார்ப்பானும் மறந்தும்கூட ஒரு எருமை மாட்டை வளர்க்காத நாட்டில், எந்தப் பார்ப்பன அக்ரகாரத்திலும் வாசலில் தவறிப்போய்கூட எருமைச்சாணியை பயன்படுத்தாத சூழலில் இத்தகைய 'உபதேசங்கள்' தமிழர்களுக்கு வழங்கப்படுகின்றன. எங்களுக்குச் சாணி என்றால் சாணிப் பாலும் சவுக்கடியும் தான் நினைவுக்கு வருமே ஒழிய, அதை மருந்தாகப் பார்க்க முடியாது. இப்பத்தான் இந்தத் தலைமுறைதான் ஒடுக்கப்பட்ட எமது இனம் சாணியையும் மாட்டையும் ஒதுக்கிவிட்டு கம்ப்யூட்டரையும், கல்லூரிகளையும் பார்க்கிறது. இன்றும் எங்கள் அப்பன், பாட்டன் வீடுகளில், வீட்டுக்கு முன்புறம் மட்டுமல்ல, வீடு முழுவதற்குமே சாணித் தரைதான். அதுவும் வாரம் ஒரு முறை ஃப்ரெஷ் சாணி. எந்த நோயையும் அந்த சாணித் தரை தடுக்கவில்லை. இப்பத்தாண்டா எங்கள் பரம்பரை மொசைக் தரையவே பார்க்கிறோம். அது உங்களுக்குப் பிடிக்கலயா? நீங்க மட்டும் ஐ.ஐ.டி.யில் ப்ராஜெக்ட் எழுதி அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் அனுப்புவீங்க, நாங்க சாணியிலயும், சகதியிலயும் சாகனுமா?

"வாசல் தெளித்து, கோலம்கூட போட மாட்டேங்கறா" என்று சராசரி ஆண்களால் குற்றம்சாட்டப்பட்டு, பல பெண்களின் வாழ்க்கை விவாகரத்துவரை போய்க் கொண்டு இருக்கிறது. கோலம்கூட போடத் தெரியாதா? என்ற கேள்வி இன்றும் பல பெண்களுக்கு சங்கடத்தை உருவாக்கியே வருகிறது. இது ஒரு இந்து உளவியல். இந்து வாழ்வியல். தட்டுத் தடுமாறி ஒடுக்கப்பட்ட சமுதாயம் மேலே வந்து கம்ப்யூட்டர் நிறுவனங்களில் கால் வைக்கத் தொடங்கியிருக்கிறது. வெளிநாடுகளுக்குப் போய்வரத் தொடங்கியிருக்கிறது. அதைப் பொறுக்க முடியாத பார்ப்பனக் கூட்டம், மீண்டும் பழமையைத் திணிக்கத் துடிக்கிறது. தமிழன் பெருமையை வீழ்த்தியது இடஒதுக்கீடு, சிபாரிசு, ஊழல் (Reservaton, Recommendation, corruption) தான் என்று இத் திரைப்படத்தில் வசனம் வருகிறது. இடஒதுக்கீடு தமிழனை உயர்த்தியதா? தாழ்த்தியதா? தமிழன் என்ற போர்வைக்குள் பார்ப்பனீயத்தைக் குழைத்துத் தரும் சூழ்ச்சி தானே இது?

**(தோழர் பெரியார் இணையதளத்திலிருந்து)**

# பரமக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்துப் பேரணி



மூவர் தூக்குத் தண்டனை, பரமக்குடி துப்பாக்கிச் சூடு, கூடங்குளம் அணுஉலை ஆகிய எதேச்சதிகார அரசுகளின் நடவடிக்கைகளைக் கண்டித்து 5.11.2011 அன்று கண்டனப் பேரணி நடைபெற்றது. சென்னை திருவொற்றியூரில், அம்பேத்கர் சிலையிலிருந்து புறப்பட்ட பேரணி சுமார் 4 கி.மீ. தொலைவு பயணித்து பெரியார் சிலையருகில் நிறைவு பெற்றது. ம.தி.மு.க. பொறுப்பாளர் மல்லைச் சத்தியா பேரணியை துவக்கி வைத்தார்.

பெரியார் திராவிடர் கழகம், ம.தி.மு.க., நாம் தமிழர், காஞ்சி மக்கள் மன்றம், அம்பேத்கர் சிறுத்தைகள், எம்.ஆர்.எப். தொழிலாளர் சீரமைப்பு இயக்கம், தமிழ்நாடு மார்க்சிய லெனினிய கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் பேரணியில் பங்கேற்றனர்.

## கழகத் தோழரை தாக்கிய சங்கராபுரம் காவல்நிலைய ஆய்வாளர் மன்னிப்புக் கேட்டார்

அரசு ஆணைகளுக்கு எதிராக, காவல் நிலையங்களில் ஆயுத பூசை போடக் கூடாது என்று கழகம் காவல் நிலையங்களுக்கு வேண்டுகோள் கடிதங்களை அனுப்பியது. நேரிலும் ஆயுதப் பூசைகள் நடக்கிறதா என்பதைக் கண்காணித்தது. உயர்நீதிமன்றத்திலும் கழக சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழக்கு தொடர்ந்தார். இதனால் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் காவல்நிலையத் திலும் ஆயுத பூசை நிறுத்தப்பட்டது.

நேரில் சென்று இதை வலியுறுத்திய கழகத் தோழரும் ஆட்டோ ஓட்டு நருமான பிரபு என்ற தோழரை, சங்கராபுரம் காவல்நிலைய ஆய்வாளரான ரவி, ஆயுத பூசை போடாத ஆத்திரத்தில் காவல் நிலையத்துக்கு வெளியே, தனது ஆட்டோ ஓட்டும் தொழில் புரிந்து கொண்டிருந்தபோது, "நீ தானடா, ஆயுத பூசை போடவிடாமல் தடுத்தாய்!" என்று கூறி தாக்கியுள்ளார். கேவலமாகவும் பேசியுள்ளார். சேதி அறிந்த கழகத் தோழர்கள், ஆய்வாளரை சந்தித்துக் கேட்டபோது, போக்குவரத்துக்கு இடையூறாக ஆட்டோவை நிறுத்தியதால் தாக்கியதாக திசை திருப்பினார். கழகத் தோழர்களிடமும் திமிரோடு பேசியுள்ளார். இதைக் கண்டித்து சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகே அக்.29 ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விவசாய விடுதலை முன்னணி, தேசிய மனித உரிமை இயக்கம், மனித உரிமை மக்கள் இயக்கம், ஆட்டோ ஓட்டுநர் சங்கம் போன்ற அமைப்புகளும் போராட்டத்தில் பங்கேற்க ஆதரவு தெரிவித்தனர். போராட்ட அறிவிப்பு மாவட்ட காவல்துறை அதிகாரிகள் கவனத்துக்குச் சென்றது. இதன் பிறகு, ஆய்வாளர் ரவி, கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழமை அமைப்புகளின் பொறுப்பாளர்கள் முன்னிலையில் நடந்தவற்றுக்கு மன்னிப்புக் கேட்பதாகக் கூறினார். இதனால் ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது.

## நாமக்கல்லில் கலந்துரையாடல் கூட்டம்


30.11.2011 ஞாயிறன்று திருச்செங்கோடு பரணி பாவேந்தன் மருத்துவமனை மேல்தளத்தில் தி.க. கைலாசம் தலைமையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா. வைரவேல், திருச்செங்கோடு நகர தலைவர் - சி. சிவக்குமார், செயலாளர் து. சதீசு குமார்; மல்ல சமுத்திரம் ஒன்றிய செய லாளர் சு. பெரியண்ணன், அமைப் பாளர் ந. கண்ணன்; எலச்சிப் பாளை யம் ஒன்றிய அமைப்பாளர் மா. முத்துச்சாமி. மூன்று தமிழர் தூக்குத் தண்டனையை நீக்குவதில் இரட்டை வேடம் போடும் தமிழக அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 17th November 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | நவ. 24, 2011 | புரட்சி 10 | முழக்கம் 45 | விலை: ரூ.2.50


## நவ.26 சட்ட எரிப்பு நாள்

# நமது சிந்தனைக்கும் செயல்பாட்டுக்கும்...

*நவம்பர் 26 சட்ட எரிப்பு நாள்! சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை பெரியார் 1957 இல் இதே நாளில் எரிக்கச் சொன்னார். இந்த சட்டப் பிரிவுகள் சாதியை மட்டும் பாதுகாக்கவில்லை. பார்ப்பன மேலாண்மையையும் இன்று வரை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை; எப்படி?*

- அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 19, 25, 26, 372(1) ஆகியவற்றில் 'பழக்கச் சட்டம்', 'வழக்கச் சட்டம்' (Customs and Usages) என்பதற்கு சட்டப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- மதச் சுதந்திரம் மற்றும் பழக்க வழக்கங்களில் எந்த சட்டமும் தலையிட முடியாது என்ற பார்ப்பனர்களுக்கான பாதுகாப்பை அரசியல் சட்டத்தில் இணைப்பதற்கு திரைமறைவில் தனது செல்வாக்கை செலுத்தி செயல்பட்டவர், பார்ப்பனர்களின் தலைவரான, இறந்துபோன காஞ்சி சீனியர் சங்கராச்சாரியான சந்திரசேகரேந்திர சரசுவதி என்பவர்தான்!
- அரசியலமைப்புச் சட்டத்தின் 26வது பிரிவு மதங்களைப் பற்றிப் பேசுகிறது. மதப் பிரச்சினைகள் எதுவானாலும் அது சட்டங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கும் என்றுதான் அரசியல் சட்டத்தை உருவாக்கிய அமைப்பு முடிவு செய்திருந்தது. சங்கராச்சாரி தலையீட்டில்தான் இது மாற்றப்பட்டது. மதங்கள் தொடர்பான சொத்துகளை நிர்வகிப்பதில் மட்டுமே சட்டம் கட்டுப்படுத்தும். மற்றபடி ஒவ்வொரு மதப் பிரிவும் ஒரு மதத்துக்குள்ளேயே இருக்கும் பல்வேறு பிரிவுகளும் எவ்வித சட்டக் குறுக்கீடுமின்றி செயல்படலாம் என்ற உரிமையை சட்டம் வழங்கிவிட்டது.
- பிற மதங்களைப்போல் இந்து என்ற பெயரில் ஒரே மதமில்லை. சைவம், வைணவம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கலவையாக இருப்பதால் 'ஒரே மதத்தின் கீழ் உள்ள பல்வேறு பிரிவுகள்' என்ற வாசகத்தையும் சங்கராச்சாரியே உருவாக்கி அரசியல் சட்டத்தில் சேர்க்கச் செய்துவிட்டார். இதன் விளைவுகள் என்ன?
- பார்ப்பனரல்லாத மக்கள் "சூத்திரர்கள்" அதாவது "பிராமணர்"களின் வைப்பாட்டி மக்கள், அடிமைகள் என்ற அவலத்துக்கு சட்டத்தின் பாதுகாப்பு தொடருகிறது.
- அனைத்து சாதியினரும் கோயில் கருவறைக்குள் நுழைந்து பூசை செய்ய முடியாமல் தமிழக சட்டமன்றத்தில் இரண்டு முறை தீர்மானம் நிறைவேற்றியும் செயல்படுத்த முடியாமல் உச்சநீதிமன்றத்தால் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. "பிராமணன்" என்ற பிறப்பு தகுதியுள்ளவர்கள் மட்டுமே கர்ப்பகிரகத்தில் நுழைய முடியும். கடவுளுடன் "உரையாட" முடியும். கடவுளுக்கு மந்திரத்தின் மூலம் சக்தியை ஏற்ற முடியும். ஏனைய பார்ப்பனரல்லாதவர்கள் 'சூத்திரர்கள்' என்பதால் கர்ப்ப கிரகத்துக்குள் நுழைய முடியாது. அப்படி நுழைந்தால் அது 'பழக்கவழக்கத்துக்கு' எதிரானது புனிதம் பறிபோய்விடும் என்ற நிலையே இன்று வரை நீடிக்கிறது.
- மதச் சுதந்திரத்தின் அடிப்படையிலேயே பார்ப்பான் பூணூல் போட்டுக் கொண்டு தன்னை உயர் பிறப்பாளராக அறிவித்துக் கொள்கிறான். "என்னைத் தவிர, பிறர் எல்லாம் சூத்திரன்" என்று இதன் மூலம் நெஞ்சு நிமிர்த்தி அறிவித்து பவனி வருகிறான்.
- இத்தகைய தங்குதடையற்ற மதச் சுதந்திரம் சட்டத்தில் வழங்கப்பட்டிருப்பதால்தான் கோயிலில் உள்ள கடவுள் சிலைகளே சட்ட ரீதியான நபர்களாகவும், நிரந்தரமான "மைனர்களாகவும்" சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பேசும் சக்தியற்ற இந்த சிலைகள், தனக்காக, தனது காப்பாளர், அறங்காவலர், அல்லது தனது பக்தர்கள் வழியாக நீதிமன்றம் போகும் உரிமைகளைப் பெற்றிருக்கின்றன. அதே நேரத்தில் சட்டத்தால் 'மைனராக' ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த கடவுள் சிலைக்கு எதிராக சிவில் வழக்குகளையோ, அல்லது கிரிமினல் வழக்குகளையோ எவரும் தொடர முடியாது. இந்திய அரசியல் சட்டம் இந்துக் கடவுளுக்கு மட்டுமே இந்த உரிமைகளை வழங்கியிருக்கிறது. பிற மதக் கடவுளர்களுக்கு இந்த உரிமை கிடையாது.
- இந்த உரிமையின் அடிப்படையில் தான் அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று கூறி மசூதியை இடித்த வழக்கில் 'ராமன்' பெயரிலேயே (ஒரு மைனர் என்ற முறையில்) வழக்கு தொடரப்பட்டு, அந்த மனுவை நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது.
- அலகாபாத் உயர்நீதிமன்றம் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று உலகமே எள்ளி நகையாடக் கூடிய ஒரு தீர்ப்பை (செப்.30, 2010) வழங்கியது அல்லவா? அத் தீர்ப்பில் ஒரு பகுதியை சுட்டிக் காட்ட வேண்டும். ஒரு மைனராக நீதிமன்றத்துக்கு வந்துள்ள இராமன், மாற்றார் சொத்துக்குரிய இடத்துக்கு (பாபர் மசூதி) உரிமை கோர முடியுமா என்ற கேள்வி நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டது. அதற்கு நீதிபதி தந்த தீர்ப்பில், 'ராமன்' பிறந்த அந்த இடத்தை ஒரு அசையாத சொத்தாக பார்ப்பது தவறு. இராமன் பிறந்த இடம் என்பது பகவான் வாயுவைப்போல் பரவி நிற்கும் புனிதப் பூமி. தன்னளவிலே பகவான் அங்கே பிறந்து சக்தியாக விரவி நிற்கிறார். இதற்கான ஆதாரம் ஸ்மிருதிகளிலே (பார்ப்பனர்களின் திமிரைப் போற்றுபவை) இருக்கிறது என்று நீதிமன்றம் பதிலளித்துள்ளது. ஒரு கோயிலை இடித்து விட்டதாலோ அங்கே கடவுள் சிலை இல்லாமல் போய்விடுவதாலோ, அந்த இடம் தெய்வீகத் தன்மையை இழந்து விடவில்லை. கோயில் இருந்த அந்த இடமே, கடவுள் தன்மை பெற்றதுதான். அந்த அடிப்படையில் தனது இருப்பிடத்துக்காக 'இராமனுக்கு' வழக்காடும் உரிமை உண்டு என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.
- எனவே, பாபர் மசூதி ஒரு நிலம் என்ற அடிப்படையில் 'சொத்து' என்றாலும் கூட, அந்த நிலமே கடவுளாகவும் இருக்கிறது. அந்த இடத்தை ராமனைத் தவிர வேறு எவரும் சொந்தம் கொண்டாட முடியாது. அரசாங்கத்துக்கே அந்த இடத்தில் கை வைக்கும் அதிகாரம்கிடையாது - என்று கூறுகிறது, அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு.
- இப்படி இந்து கடவுள் சிலைகளை மனிதர்களாக்கி, சட்டத்தின் உரிமைகளை வழங்கி, அதே நேரத்தில் சிலைக்கு எதிராக வழக்காடும் உரிமைகளையும் மறுத்து, அரசுக்கே தலையிடக்கூடிய உரிமைகளையும் பறிக்கும் பாதுகாப்புகளை இந்த நாட்டின் அரசியல் சட்டப் பிரிவுகள் வழங்கியிருக்கின்றன.

இங்கே 'கடவுள் சிலைகள்' என்ற பெயரில் பதுங்கி நிற்பவர்கள் பார்ப்பனர்கள் தான். ஒவ்வொரு ஆகமக் கோயில் கடவுளும் பார்ப்பான்தான். காரணம், அந்த கடவுள் சிலைகளே பார்ப்பனர்களின் மந்திரத்துக்குத்தான் கட்டுப்பட்டுள்ளது.

- எனவேதான், அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள மதப் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் 'பழக்க வழக்கங்களுக்கு' வழங்கியுள்ள சட்டப் பாதுகாப்புகள் இருக்கும் வரை - பார்ப்பான் "சூத்திரன்" என்ற சட்டப்படியான இழிவு தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தீண்டாமை ஏற்றத்தாழ்வுகள் என்ற மனித விரோதக் கோட்பாடுகளை சட்டம் பாதுகாத்துக் கொண்டே இருக்கும்.

கோயில் கர்ப்பகிரகத்துக்குள் இப்போது பார்ப்பனரல்லாதாருக்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள "தீண்டாமை"யை தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தாலும் தடுக்க முடியாதது ஏன் என்ற கேள்வியை எழுப்பினால், பார்ப்பன கொடுங்கோன்மை சட்டத்தில் புகுந்து கொண்டிருக்கும் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

**பெரியார் – இந்த சட்டப் பிரிவுகளை எரிக்கச் சொன்னதன் பின்னணி இதுதான்!**

'மதச் சுதந்திரம்' என்ற சட்டப் பிரிவுகள், பார்ப்பனரல்லாத மக்களை 'சூத்திரர்' என்று இழிவுபடுத்தி, 'வர்ணாஸ்ரமம்' என்ற சமூக விரோதக் கோட்பாடுகளுக்கும் நியாயம் சேர்க்கிறது. "பிராமணனை" அங்கீகரிக்கிறது; சாதியைப் பாதுகாக்கிறது. இன்றும் கோயில் கருவறையில் பார்ப்பனரல்லாதாரை 'சூத்திரன்' என்று பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

சட்ட எரிப்பு நாளில் நாம் இதை ஆழமாக சிந்திக்க வேண்டும்!

## பெருமானத் தமிழன்!



**'பிரபா கரன்' என்னும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன் – அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!**

**இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து, அவன்
சிந்திய அரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!
பிந்திய தமிழ்மறம் பேணிப்புரந் தான்! – அவன்
வந்தலர்ந்த நாள் மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்
வளர்க அவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!**

**மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன் – அவன்
பிறந்தொளிர்ந்த நாள்நினைந்து பேரிகையே
பெற்றான்காண் பெரும்புகழும்! முழங்கு!
பிளிறுகவே வேழம்!**

**பாவலரேறு பெருஞ்சித்திரனார் 1989.**

### சட்ட எரிப்பு நாள் சிந்தனை:

## முதுகுளத்தூர் கலவரமே சாதி எரிப்புப் போராட்டத்தின் பின்னணி

*முதுகுளத்தூரில் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு எதிராக நடடநத சாதிக் கலவரத்தில் முத்துராமலிங்கத் தேவருக்கு எதிராகக் குரல் கொடுத்த ஒரே தலைவர் பெரியார் தான். 1957 ஆம் ஆண்டு பெரியார் அறிவித்த சாதி ஒழிப்புக்கான சட்ட எரிப்புக் கிளர்ச்சியே முதுகளத்தூரில் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்களுக்கு எதிரான கலவரத்தின் தொடர்ச்சியான தாக்கம்தான். இந்த வரலாற்று உண்மைகள் - இருட்டடிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து 'ஆதித் திராவிடத் தோழர்களுக்கு' என்று 'விடுதலை'யில் அப்போது வெளிவந்த தலையங்கம், இந்த உண்மையை தெளிவுபடுத்துகிறது. சாதி ஒழிப்பு சட்ட எரிப்பு நாள் நினைவாக அத் தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்:*

நூற்றுக்கணக்கான பெண்கள் சட்டத்தைக் கொளுத்தப் போவது உறுதி. முதுகுளத்தூர் கலவரத்திற்குப் பிறகு தமிழ் நாட்டிலுள்ள ஆதி திராவிடர்கள் அனைவரும் காமராசர் ஆட்சிக்கு எதிராக உள்ள அரசியல் கட்சிகளை நஞ்சாக வெறுத்து விட்டனர். நூற்றுக் கணக்கான ஆதி திராவிட உயிர்கள் பலி யாக்கப்பட்டிருப்பதையும், ஆயிரக் கணக்கான குடிசைகள் தீக்கிரையாக்கப் பட்டதை யும் சிறிதும் பொருட்படுத்தாதபடி ஐந்து "உயர்சாதி"க்காரர்களை போலீசு சுட்டுக் கொன்றது பற்றி கண்ணீர் வடிப்பதும், திரு. முத்துராமலிங்க தேவரை விடுதலை செய்ய வேண்டு மென்று கடையடைப்பு செய்யவும் இதற்காக சட்டசபையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதும், இதற்காக சட்டசபையை விட்டு வெளியேறுவதும் போன்ற நடத்தைகளால் அரசியல் எதிர்கட்சிகள் என்பவை ஆதி திராவிட சமுதாயத்திற்கு துரோகம் செய்து விட்டன. இந்த மன்னிக்க முடியாத குற்றத் திற்காக ஆதி திராவிட சமூகம் இந்த எதிர் கட்சிகள் மீது இன்று ஆத்திரப்பட்டு கொதிப் படைந்து இருக்கிறது.

நேற்று சென்னைக் கூட்டத்தில் பேசிய தலைவர் பெரியார் அவர்கள்கூட "நான் சட்ட சபையில் இடம் பெற்றிருக்கக்கூடிய பொல்லாத வேளை ஏற்பட்டிருந்தால் ஏன் முன் கூட்டியே கலகக்காரர்களை சுட்டு வீழ்த்தியாவது ஆதி திராவிட உயிர்களையும், வீடுகளையும் காப் பாற்றியிருக்கக் கூடாது?" என்று மந்திரிகளை நோக்கி கேட்டு இருப்பேன்" என்று கூறினார். எனவே சாதி வெறிக்குச் சிறிதுகூட இடமளிக்கக் கூடாது என்பதில் திராவிடர் கழகத்தைப் போன்ற தீவிர லட்சியங்கொண்ட கட்சியே இந்நாட்டி லில்லை.

இன்று அரசியல் சட்டத்தைக் கொளுத்து கிறோம் என்றால், எதற்காக? அதில் சாதிக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதற்காகத்தான். சாதி உள்ள வரையில் தீண்டாமை ஒழியுமா? ஒழிந்திருக்கிறதா? அரசியல் சட்டத்திலுள்ள தீண்டாமை ஒழிப்பு விதிகூட, டாக்டர் அம்பேத்கார் அவர்களைத் திருப்தி படுத்து வதற்காகவே தவிர, உண்மையான நோக்கத்துடனல்ல. இதை உணர்ந்துதான் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்கூட, "இந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும். நானே இதை கொளுத்தப் போகிறேன்" என்று ராஜாங்க சபையில் 3.9.1953-லேயே கூறினார். அதன் பிறகு இரண்டாண்டு கழித்துத்தான் சுமார் மூன்று லட்சம் ஆதித் திராவிடரை பவுத்த நெறியில் சேர்த்து விட்டுத் தாமும் அதைத் தழுவினார். இதன் விளைவாகத்தான் அவரைத் தந்திரமாகக் கொலை செய்தார்கள் இந்துமத வெறியர்கள். ஆகவே, அரசியல் சட்டம் ஆதித் திராவிடரின் தீண்டாமையொழிப்புக்குக்கூடப் பயன்பட வில்லை என்பதற்கு டாக்டர் அம்கேத்காரை விடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறென்ன வேண்டும் என்று கேட்கிறோம்.

**'விடுதலை' தலையங்கம் 11.11.1957**

# சட்ட எரிப்பு: தஞ்சை மாநாட்டுத் தீர்மானம்

*1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் பெரியார் இயக்கம் சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளைத் தீயிட்டு எரிக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்கப் போராட்டத்தை நடத்தியது. இதற்கான போராட்ட அறிவிப்புக்காக 3.11.1957 அன்று பெரியார் தஞ்சையில் சிறப்பு மாநாட்டைக் கூட்டி போராட்டத்தை அறிவித்தார். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது:*

அரசியல் சட்டத்தில் கண்டுள்ள மதப் பாதுகாப்பு, மத உரிமை என்பதில் இந்துமதம் என்பதை எடுத்துக் கொணடால், அது வர்ணாசிரமதர்மம் என்கிற பிறவியில் மக்களை சாதிகளாகப் பிரித்து, அவரவர் களுக்குத் தொழிலையும் கற்பித்து, ஒரு பிறவி உயர்ந்தது, முதன்மையானது. மற்றொரு பிறவி தாழ்ந்தது, இழி வானது என்பதான கருத்துகளை அமைத்து, அந்த அமைப்பைக் காப்பதுதான், மத, சுதந்தரம் என்பதாக சாஸ்திரங்களிலும் மற்றும் மத ஆதாரங்களிலும் கூறுவதைக் கொள்கையாகவும், நம்பிக்கையாக வும் கொள்வதை உரிமையாக்குவதாக ஆகிறது. இந்த உரிமையானது இந்நாட்டு, இந்துப் பொதுமக்களில் 100-க்கு 3 பேர் களை மேல்சாதி, உயர்ந்த பிறவி, உடல் உழைப் பில்லாமல் இருந்து கொண்டு மற்றவர்கள் உழைப்பில் சுகவாசிகளாக வாழ்வதென்றும், 100-க்கு 97 பேர்களான மக்களைக் கீழ்சாதி இழிமக்கள் என்றும் உடலுழைப்பு வேலை செய்து கொண்டு அடிமையாய், பாட்டாளி யாய், வாழ வேண்டியவர்கள் என்றும், பின் சொல்லப் பட்ட மக்கள் கல்வியறிவுக்கும், நீதி, நிர்வாக உத்யோகங்கள் பதவிகளுக்கும் தகுதியற்றவர் களென்றும் ஆக்குவதாக இருப்பதால், இந்த மதக் காப்பாற்று உரிமை கண்டிப்பாக எடுக்கப்பட வேண்டு மென்பதும் அவசியமென்று இம்மாநாடு கருதுகிறது.

**சட்ட எரிப்பு நாள் சிந்தனை**

இந்தக் காரியங்கள் சாதாரணமான தன்மையில் மாற்றப்படாவிட்டால் எந்தவிதமான முறையைக் கையாண்டாவது மாற்றித் தரும்படி செய்ய வேண்டி யது பொது மக்களின் இன்றியமையாத கடமை யென்று இம்மாநாடு கருதுகிறது.

மற்றும் இந்த அரசியல் சட்டமானது பொது ஜனவோட்டு உரிமையில்லாமலும் சரியான தேர்தல் முறையில்லாமலும் பொறுக்கி எடுத்துக் கொள்ளப் பட்டவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையினால் வகுக்கப்பட்ட சட்டமாதலாலும்.

இந்தச் சட்டத்தைத் தயாரித்த ஆறு பேர்களில் பெரும்பான்மையானவர் பார்ப்பனர் ஆதலாலும், பார்ப்பனர் முஸ்லீம் பஞ்சமர் ஆகியவர்களைத் தவிர்த்த பொது ஜனத் தொகையில் 100-க்கும் 75 பேர் களாயுள்ள 'சூத்திரர்' என்று ஆக்கப்பட்டிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு பிரதிநிதித்துவமில்லாத ஒரு சட்டம் செய்யும் குழுவைக் கொண்டு இச்சட்டம் வகுக்கப்பட்டிருப்பதாலும்,

இந்த சட்டமானது 'நான்காம் சாதி' என்று கூறப்படுகின்ற மக்களைக் கட்டுப்படுத்தத் தக்கதாக ஆகாது என்று இம்மாநாடு கருது கிறது.

இப்படிப்பட்ட காரணங்களால் இந்த நாட்டுப் பெருங்குடி மக்களுக்கு அமைப்பு, சாதி, மதம் ஆகியவை காரணமாக, நீதி, சமத்துவம், சகோதரத் துவம், சுதந்திரம் ஆகியவை அளிக்கப்படாதததா யிருப்பதால், இவைகளை முன்னிட்டு இந்த அரசியல் சட்டம் இந்நாட்டுப் பெருங்குடி மக்களுக்குக் கேடானது என்று கருதுவதால், இக்கேடுகளுக்கு ஒரு தெளிவான பரிகாரமோ, விளக்கமோ இன்று முதல் 15 நாள் வாய்தாவுக்குள் இந்த அரசாங்கம் மக்களுக்கு அளிக்காவிட்டால், இந்த அரசியல் சட்டத்தை எதிர்த்து ஒழிக்கும் முயற்சியின் அறிகுறியாக, 1949 நவம்பர் 26-ந் தேதி என்ற அரசியல் சட்ட பிறப்பு நாள் வைத்து இந்த நவம்பர் மாதம் 26-ந் தேதியன்று மாலையில் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு பார்ப்பன ரல்லாத திராவிடராலும் இச்சட்டம் நெருப்பிலிட்டுக் கொளுத்தத்தக்கது என்று இம்மாநாடு பொது மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

**'விடுதலை' -5.11.1957**

## கிடப்பில் போடப்படும் கருணை மனுக்கள்: உச்சநீதிமன்றம் அதிரடி

*உச்சநீதிமன்ற நீதிபதி கங்குலி தூக்குத் தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார். 'தூக்குத் தண்டனை காட்டுமிராண்டித்தனமானது; உயிர் வாழும் உரிமைக்கு எதிரானது; ஜனநாயகத்துக்கு எதிரானது; பொறுப்பற்றது' என்ற கடுமையான வார்த்தைகளில் அவர் விமர்சித்துள்ளார். அரசியல் சட்டம் வழங்கியுள்ள உயிர் வாழும் உரிமையை சுட்டிக் காட்டியுள்ள அவர், இது தனது தனிப்பட்ட கருத்து என்று கூறியுள்ளார்.*

கடந்த நவம்பர் 15 ஆம் தேதி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களின் 'கருணை மனு'க்களை நீண்டகாலத்துக்குப் பிறகு தள்ளுபடி செய்வதை எதிர்க்கும் வழக்கின் விசாரணை உச்சநீதிமன்றத்தில் வந்தது. தமது கருணை மனு 8 ஆண்டுகளுக்குப் பிறகு குடியரசுத் தலைவரால் தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து, பஞ்சாபைச் சேர்ந்த தேவேந்தர் பால்சிங் புல்லார் வழக்கு தொடர்ந்திருந்தார். வழக்கை விசாரித்த நீதிபதிகள் டிஜி.எஸ். கிங்வி, எஸ்.ஜே. முகோபாத்யா ஆகியோர், குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநரிடம் நிலுவையிலுள்ள அனைத்து கருணை மனுக்கள் தொடர்பான விவரங்களை நான்கு வாரத்திற்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்டனர். மூத்த வழக்கறிஞர்கள் ராம் ஜெத் மலானி, டி.ஆர். அந்திஅர்ஜுனா ஆகியோர், புல்லார் சார்பில் நீதிமன்றத்தில் நேர் நின்றனர்.

கருணை மனுக்களை அனுப்பி, நீண்டகாலத்துக்குப் பிறகு அதை ரத்து செய்வதால் இந்த காலதாமதத்தின் அடிப்படையில் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாமா என்ற விவாதம் நடந்தது. அப்போது நீதிபதிகள் குறுக்கிட்டு இதற்காக நீதிமன்றத்துக்கே நெருங்க முடியாத ஏராளமானோர், சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டுள்ளதற்கு தங்கள் வியப்பைத் தெரிவித்தனர். தொடர்ந்து கருணை மனுக்களுக்கு காத்திருக்கும் அனைவர் தொடர்பான விவரங்களையும் தாக்கல் செய்ய அரசு கூடுதல் வழக்கறிஞருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

'அனைத்து கருணை மனுக்களையும் இந்த நீதிமன்றம் பரிசீலிக்க விரும்புகிறது. எல்லோருக்கும் நீதிமன்றத்தை அணுகும் வாய்ப்பு கிடைப்பதில்லை" என்று கூறிய நீதிபதிகள் வழக்கை ஜனவரி மாதம் தள்ளி வைத்தனர்.

## தலித் பெண்களை மீட்டனர் நாமக்கல் மாவட்ட கழகத் தோழர்கள்

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பகுதியிலுள்ள 'கீர்த்தி ஸ்பின்னர்ஸ் லிமிடெட்' எனும் தனியார் நூற்பாலை - அருந்ததி சமூகப் பெண்களை ஒப்பந்தக் கூலிகளாக நியமித்து அவர்களின் உழைப்பைச் சுரண்டி வருகிறது. தேனி மாவட்டத்தைச் சார்ந்த பவித்ரா, மாரியம்மாள் மற்றும் அவரது சகோதரிகள் இருவர் உட்பட நான்கு பெண்களையும் நான்கு ஆண்டுகளுக்கு ரூ.35,000 ஊதியம் தருவதாகக் கூறி, ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, உழைப்பைச் சுரண்டியவர்கள். ஒப்பந்த தேதி முடிவடைந்த பிறகும், மிரட்டி, அவர்களை விடுவிக்காமல், வேலை வாங்கி வந்தனர். இந்தக் கொத்தடிமைக் கொடுமையை அறிந்த பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கினர். திருச்செங்கோடு மற்றும் குமாரபாயைம் கழகத் தோழர்கள் வைரவேல், சிவக்குமார், மாவட்டத் தலைவர் தி.க. கைலாசம், கேப்டன் அண்ணாத்துரை, தமிழ்ப் புலிகள் இயக்கத்தைச் சார்ந்த தலித்குமார், தலித் ராயன் ஆகியோர் காவல்தறையின் கவனத்துக்கு இதைக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர். காவல்துறையின் உதவியோடு அந்த நான்கு பெண்களும் மீட்கப்பட்டதோடு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஊதியமும் நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தரப்பட்டது. கழகத்தின் முயற்சிகளுக்கு தலித் பெண்கள் நன்றி தெரிவித்தனர்.

## உ.பி.யில் பார்ப்பனர்களுக்கு வலை வீச காங்கிரஸ் மாயாவதி போட்டா போட்டி

*உ.பி. மாநிலத்தில் அடுத்த ஆண்டு சட்ட மன்றத்துக்கான தேர்தல் வர இருக்கிறது. இதனால் பார்ப்பனர்களின் ஓட்டுகளைப் பெற மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் போட்டிப் போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. நவம்பர் 14 ஆம் தேதி உ.பி. தலித் முதல்வர் மாயாவதி லக்னோவில் பார்ப்பனர்களின் மாநாட்டை நடத்தினார்.*

*"பார்ப்பனர்கள் பெருமளவில் சுரண்டப்படுகிறார்கள்" என்று கண்ணீர் வடித்த மாயாதேவி, காங்கிரஸ் – பா.ஜ.க.வினர், ஏன் பார்ப்பனர்களை முதலமைச்சருக்கான வேட்பாளர்களாக அறிவிக்கவில்லை என்று கேள்வி எழுப்பியுள்ளார். "பார்ப்பன சமாஜ் பய்ச்சாரா சமிதி" என்ற பெயரில் கூட்டப்பட்ட மாநாட்டில் பேசிய மாயாவதி தமது கட்சியிலும், ஆட்சியிலும் பார்ப்பனர்களை அதிகாரத்தில் அமர்த்தியிருப்பதை பெருமையுடன் கூறிக் கொண்டார்.*

*"பகுஜன் சமாஜ் கட்சிக்கு பார்ப்பன முகம் உண்டு; சதீஷ் சந்திர மிஸ்ராவை மாநிலங்களவை உறுப்பினராக்கியுள்ளோம். எரிசக்தித் துறை அமைச்சர் ராம்வீர் உபாத்யாயா, பொதுப் பணித் துறை அமைச்சர் நசிமுதின் சித்திக்கி, பஞ்சாயத்துத் துறை அமைச்சர் சுவாமி பிரசாத் மவுரியா இவர்களின் நெருக்கமான உறவினர்களுக்கு அரசுப் பதவிகளும் கட்சிப் பதவிகளும் வழங்கியுள்ளோம் என்று கூறி, பார்ப்பனர்களின் பெயர்களை பட்டியலிட்டார் மாயாவதி.*

*கடந்த 2007 சட்டமன்ற தேர்தலில் – பகுஜன் சமாஜ் கட்சி 86 பார்ப்பனர்களை வேட்பாளர்களாக நிறுத்தியது. இதில் 43 பேர் வெற்றிப் பெற்றனர். "காங்கிரசும் பா.ஜ.க.வும் பார்ப்பனர்களை முதல்வராக்குவதாக அறிவிக்கக் கூடும். அதில் ஏமாந்து விடாதீர்கள்" என்றும் மாயாவதி பார்ப்பனர்களை எச்சரித்தார்.*

*அதைத் தொடர்ந்து காங்கிரசும், பார்ப்பனர்களுக்கு வலைவீசக் கிளம்பியிருக்கிறது. மாயாவதி பார்ப்பனர் மாநாடு நடத்திய அடுத்த நாளே காங்கிரஸ் கட்சி சோனியா தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்தது. வைதீகப் பார்ப்பனரும், காசி இந்து பல்கலைக்கழகத்தை உருவாக்கியவருமான மதன் மோகன் மாளவியாவின் 150 ஆவது பிறந்த நாள் மற்றும் நேருவின் தந்தை பண்டிட் மோதிலால் நேரு பிறந்த நாள் விழாக்களை நடத்தி பார்ப்பனர்களை மகிழ்விக்க காங்கிரஸ் முன் வந்துள்ளது. உ.பி.யில பல்வேறு பகுதிகளிலும், டெல்லி, மும்பை, பெங்களூரிலும் இவர்களுக்கான விழாக்களை காங்கிரஸ் கட்சி நடத்த திட்டமிட்டுள்ளது.*

*லண்டன் வட்டமேஜை மாநாட்டில் பங்கேற்கச் சென்ற மதன்மோகன் மாளவியா என்ற பார்ப்பனர், கடல் கடந்து போவது "பிராமணனுக்கு" எதிரானது என்பதால், அந்த 'தோஷத்தை'க் கழிக்க, தன்னுடன் காசியிலிருந்து ஒரு 'பிடி மண்ணை' லண்டனுக்கு எடுத்துச் சென்று பூஜை நடத்தினாராம். எனவே, அவருக்கு 'மண்ணுருண்டை மாளவியா' என்ற பட்டப் பெயரும் உண்டு. காங்கிரஸ் இயல்பாகவே பார்ப்பனர்களுக்கான கட்சி என்ற உணர்வை மீண்டும் புதுப்பிக்க திட்டமிட்டுச் செயல்படுகிறது என்றும், அதனாலேயே ராகுல்காந்தி, தனது தேர்தல் பிரச்சாரத்தை நேரு போட்டியிட்டு வெற்றிப் பெற்ற புல்பூர் தொகுதியிலிருந்து தொடங்கினார் என்றும் 'இந்து' நாளேட்டின் செய்தியாளர் எழுதியுள்ளார். (நவம்.15)*

*மாயாவதி பார்ப்பனர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள தாம் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளதோடு, உ.பி. மாநிலத்தில் உயர்சாதிக் காரர்களான பார்ப்பனர் தாகூர்களுக்கிடையே நிலவும் பகைமையையும் பயன்படுத்தி வருகிறார். காங்கிரஸ் கட்சி, திக் விஜய் சிங் என்ற தாக்கூரையும் பா.ஜ.க. ராஜ்நாத் சிங் என்ற தாக்கூரையும் தங்கள் கட்சியின் முதலமைச்சர்களாக அறிவித்துள்ளதை பார்ப்பனர்கள் மறந்துவிடக் கூடாது என்று மாயாவதி பேசி வருகிறார். மண்டல் அலை வீச்சுக்குப் பின் உ.பி.யில் ஓரம் கட்டப்பட்ட பார்ப்பன அரசியல் செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்த பகுஜன் சமாஜ் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் போட்டிப் போட்டுக் கொண்டு நிற்கின்றன.*

## போராளிகளின் உயிர்த் தியாகத்தைப் போற்றிடும் மாவீரர் நாள்!

*விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிய போராளிகளுக்கு, மரியாதை செலுத்தும் மாவீரர் நாள் 1989 ஆம் ஆண்டு முதல் தான் தொடங்கியது. முதல் மாவீரர் நாளில் விடுதலைப் புலிகள் தலைவர் மேதகு பிரபாகரன் உரையாற்றினார்.*

இந்திய தமிழீழப் போர் உக்கிரம் அடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் தினமும் தம்முயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர். 1989, கார்த்திகை 27, அன்று அடர்ந்த தமிழீழக் காடு ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், முதலாவது விடுதலைப் புலிப் போராளி வீரச்சாவு நாளான கார்த்திகை 27ஐ மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உரையாற்றும்போது, "எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கிய நாள், இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1207 போராளிகளை நினைவுகூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காக போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும், இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக்கம்.

ஆனால், இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே - மாவீரர் நாள் - ஆகப் பிரகடனப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது, எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த - சங்கரின் - நினைவு தினமாக இன்று அந்த மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத்தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம்.

அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரே நாளில் வைப்பதால் எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம். வீரச்சாவு அடைந்த எல்லா போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக இன்று கொண்டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப்போக்கில் குறிப்பிட்ட சில சில ஆட்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த மரியாதைகள் குறிப்பிட்ட சில ஆட்களுக்குப் போவதை தடுத்து, எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவுகூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாட முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டுமிராண்டி இனமாக மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப் படுகிறார்கள். அதே வேளை வீரர்களுக்குத்தான் பஞ்சமாக இருந்தது. ஆனால், இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக்கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம்.

இதுவரைக் காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவுகூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே, இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலைநிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1207 போராளிகளின் உயிர்த் தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக கருதி இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட உள்ளோம்".

### நார்வே அரசு அறிக்கை வெளிப்படுத்தும் உண்மை

## ஈழத் தமிழர்களுக்கு சோனியாவின் துரோகம்

ஈழத்தில் நடந்த தமிழினப் படுகொலைகள் குறித்து விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும், இலங்கை அரசுக்குமிடையே சமரச முயற்சிகளை மேற்கொண்ட நார்வே அரசு, விரிவான அறிக்கை ஒன்றை தயாரித்துள்ளது. நார்வே மேற்கொண்ட சமரச நடவடிக்கைகளை இந்தியா விரும்பவில்லை என்றும், சோனியா அதிகாரத்துக்கு வந்த பிறகு ஈழத் தமிழர்களுக்கு எதிராக சிறீலங்காவின் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன என்றும் 208 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கை கூறுகிறது.

இலங்கை அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடந்த அமைதிப் பேச்சு வார்த்தை தோல்வியடைந்ததற்கும், தமிழர்களுக்கு எதிராக சிறிலங்கா அரசு தொடுத்த இனப் படுகொலைப் போருக்கு இந்தியாவின் மௌன சம்மதமே காரணமென்றும்நார்வே அரசு அமைத்த குழு வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

சர்வதேச ஆதரவுடன் இலங்கையில் அமைதி ஏற்படுத்த நார்வே அரசு மேற்கொண்ட முயற்சி தோல்வி யடைந்தது ஏன் என்பது பற்றி ஆராய நார்வே அரசு அமைத்த குழு தனது அறிக்கையில் இவ்வாறு கூறியுள்ளது:

*நார்வே அரசின் ஆணையின் பேரில் தயாரிக்கப்பட்ட 208 பக்கங்களைக் கொண்ட, 'அமைதியின் பகடைகள்' என்ற இந்த அறிக்கை, நார்வே தலைநகர் ஆஸ்லோவில் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையில் சமாதான முயற்சிகள் முறிந்து போக இந்தியா எவ்வாறு காரணமாக இருந்தது என்பது பற்றி பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2003-04 ஆண்டுகளில் சமாதான முயற்சிகள் மெதுவாக தொடங்கியபோது கொழும்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களை இந்தியா அனுதாபத்துடன் அணுகியதாக இந்த அறிக்கை கூறியுள்ளது.*

*ஆனால், 2004 இல் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், தமிழர்களின் உணர்வுகளை பாதுகாப்பதாக கூறிக் கொண்டாலும், மகிந்த ராஜபக்சே அரசாங்கத்தினது இராணுவத் தீர்வு முயற்சிக்கு எதிராக எந்தவொரு அழுத்தமும் இந்தியா கொடுக்கவில்லை என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. தனிப்பட்ட சந்திப்புகளில் நார்வேயை 'புலிகளின் நண்பர்' என்று இந்தியா விமர்சித்ததாகவும், "புலிகளை அவர்களின் இடத்தில் வைக்க வேண்டும்" என்று கூறியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ‘பகவானை’ நம்பி பலியானோர்!

**உத்தரகான்ட் மாநிலம் அரித்துவாரில் ஸ்ரீராம் சர்மா என்ற பார்ப்பனர் நடத்திய யாகத்தில் பங்கேற்கச் சென்ற பக்தர்கள் 16 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி மரணமடைந்துள்ளனர். இந்தியாவில் இதுபோல் கோயில் மத விழாக்களில் ‘பகவானை’ நம்பி பங்கேற்கச் சென்ற பக்தர்கள் மரணத்தைத் தழுவிய நிகழ்வுகள் ஏராளம் உண்டு. கடவுளுக்கு தன்னை நாடி வரும் பக்தர்களையே காப்பாற்றும் சக்தி இல்லை என்ற உண்மையை இந்த சம்பவங்கள் உணர்த்துகின்றன.**

2011, ஜன.14 - சபரிமலை, புல்மேட்டில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 104 பேர் பலி; 60 பேர் காயம்.

2010, மார்ச் 4 - உத்தரபிரதேசம் மாநிலம் பிரதாப்கார்த் எனும் இடத்தில், கிரிபலு மகாராஜா ஆசிரமத்தில் உணவு வழங்கும்போது நெரிசல் ஏற்பட்டது. இதில் 63 பேர் பலி; 15 பேர் காயம்.

2008, செப்.30 - ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் நகரிலுள்ள சாமுண்டா தேவி கோவில் விழாவின்போது, குண்டு வைக்கப்பட்டுள்ளது என புரளி கிளப்பப்பட்டது. இதனால் ஏற்பட்ட நெரிசலில் 250 பேர் பலி; 60 பேர் காயம்.

2008, ஆக.3 - இமாச்சல பிரதேசம் நைனா தேவி கோவிலில் வெடி குண்டு புரளி கிளப்பப்பட்டது. இதில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி, 150 பேர் பலி; 230 பேர் காயம்.

2008, ஜூலை - ஒரிசா மாநிலம், பூரி ஜெகன்நாதர் தேரோட்டத்தின்போது ஏற்பட்ட நெரிசலில், 6; பேர் பலி; 12 பேர் காயம்.

2008, மார்ச் 27 - மத்திய பிரதேச மாநிலம், கரிலா கிராமத்திலுள்ள கோவிலில் ஏற்பட்ட நெரிசலில் 8 பேர் பலி; 10 பேர் காயம்.

2008, ஜனவரி - ஆந்திராவிலுள்ள துர்கா மல்லேஸ்வரா கோவில் விழாவின் போது நெரிசலில் சிக்கி 5 பேர் பலி.

2007, அக்டோபர் - குஜராத் மாநிலம் பவகாத் கோவிலில் ஏற்பட்ட நெரிசலில் 11 பேர் பலி.

2006, நவம்பர் - பூரி ஜெகன்னாதர் கோயிலில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 4 பேர் பலி.

2005, ஜனவரி - மகாராட்டிரா மாநிலம், மந்தர் தேவி கோவில் திருவிழாவின்போது, ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 340 பேர் பலி.

2003, ஆகஸ்ட் - நரசிக்கில் நடந்த கும்பமேளா கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் பலிட; 125 பேர் காயம்.

1999, ஜன.14 - சபரிமலை பம்பை நதி கேம்ப் அருகில் ஏற்பட்ட நெரிசலில் 50 பேர் பலி.

- கடவுளை நம்பிச் செல்லும் பக்தர்களே! உங்களைக் காப்பாற்றும் சக்தி அந்தக் கடவுளுக்கே இல்லையே! சிந்திக்க வேண்டாமா?

## சென்னையில் சட்ட எரிப்பு நாள்: பரமக்குடி துப்பாக்கிச் சூடு கண்டன பொதுக் கூட்டம்

சென்னையில் 28.11.2011 அன்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் திருவல்லிக்கேணி அய்ஸ் அவுஸ் பி.வி. தெருவில் சட்ட எரிப்பு நாள் மற்றும் பரமக்குடி துப்பாக்கிச் சூடு கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வே. ஆனைமுத்து (மா.பெ.பொ.கட்சி), எழுத்தாளர் அ. முத்துக்கிருட்டிணன் உரையாற்றுகிறார்கள்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

சிறிலங்கா படைகளுக்கு இந்தியா ரேடார்கள், புலனாய்வுத் தகவல்களை வழங்கியது. சிறிலங்காவுக்கு தாக்குதல் போர்த் தளவாடங்களை வழங்குவதில்லை என்ற கொள்கையை புதுடெல்லி கடைப்பிடித்தாலும், வேறு எவரிடம் இருந்தும் ஆயுதங்களை சிறிலங்கா கொள்முதல் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. விடுதலைப் புலிகள் மீதான இந்திய எதிர்ப்பு நிலைப்பாடு, இலங்கைக்கு போரை நடத்துவதற்கு உந்துதலாக அமைந்தது.

2004 இல் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தபோது, விடுதலைப் புலிகளால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்ட ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியாகாந்தி, இந்தியாவின் சக்தி வாய்ந்த நபராக மாறியது திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியதாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2008 இறுதியில் பொது மக்களின் இழப்புகளை மட்டுப்படுத்துமாறு புதுடெல்லி கோரிய போதிலும்கூட, இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கும், விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கும் ஆதரவு வழங்குவதில் இந்திய அரசாங்கம் மிகவும் தெளிவாக இருந்தது.

விடுதலைப் புலிகளின் இறுதி நாட்கள் பற்றி குறிப்பிடும் இந்த அறிக்கையில், புலிகள் மிக நெருக்கமாக சுற்றி வளைக்கப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகள் சரணடைவதற்கு கொழும்பு மிகக் குறைந்தளவு ஆர்வமே காட்டியது. (அவர்களை கொன்றொழிக்கவே முனைப்பாக இருந்தது) போரின் இறுதியில் விடுதலைப் புலிகள் தப்பித்துக் கொள்வதற்கு இந்தியா ஆர்வம் காட்டியிருக்குமா என்பது சந்தேகமாகவே இருந்தது.

சமாதான முயற்சிகளில் இந்தியா கூடுதல் பங்கு வகிக்குமாறு 2007 இல் நார்வே தொடர்ச்சியாக வலியுறுத்தியபோதும் புதுடெல்லி அதை நிராகரித்து விட்டது. இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்தபோது தாக்குலை நிறுத்துமாறு இந்தியா அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்பதும் தெளிவாகியது.

போரின் இறுதிக்கட்டத்தில் இந்தியாவில் நடந்த பொதுத் தேர்தல் குறித்து சிறிலங்கா கவலை கொண்டிருந்தது. காங்கிரஸ் கட்சி தூக்கியெறியப்பட்டு வேறு யாரும் பதவிக்கு வந்தால் புலிகளுக்கு உதவி கிடைக்கலாம் என்ற கவலை சிறிலங்காவுக்கு இருந்ததாகவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் போரின் இறுதிக் கட்டத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொண்டு, முன் வரைவு அறிக்கையை ஏற்று ஆயுதங்களை கீழே போட இணங்குமாறு ஆலோசனை கூறியதாக தெரிகிறது. ஆனால் அது நடக்கவில்லை.

நார்வே அரசின் அதிகாரப்பூர்வ ஆய்வுக் குழு வெளியிட்டுள்ள இந்த அறிக்கை இலங்கையில் தமிழர் அழித்தொழிக்கப்பட்டதில் இந்திய அரசு வகித்த பங்கு ஆதாரத்துடன் விளக்கப்பட்டுள்ளது.



## கூடங்குளம் கட்டுமானத்தை ஏவுகணைத் தளமாக மாற்றலாம்

கூடங்குளம் அணுமின் திட்டம், 13000 கோடி செலவிடப்பட்ட நிலையில் அதை மூடக் கோருவது நியாயம்தானா என்ற கேள்வியை எழுப்புகிறார்கள்.

இந்தப் பணம் வீண்விரயமாக வேண்டியதில்லை. கூடங் குளம் அணுமின் திட்டத்துக்கான கட்டமைப்பை அப்படியே ஏவுகணைதளமாக மாற்றிக் கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் விண்வெளி ஆய்வு மய்யத்தில் உருவாகும் ஏவுகணைகளை விண்ணில் செலுத்துவதற்கான தளம் கிடையாது. இதற்கு வேறு மாநிலத்தைத்தான் நாடிப் போக வேண்டியுள்ளது. இந்த ஏவுகணைகளை செலுத்துவதற்கான எரிபொருளுக்கு இதுவரை, வெளிநாட்டினரை மட்டுமே நம்பி இருந்த நிலையை மாற்றி தமிழர்களான விஞ்ஞானிகளே கண்டறிந்து சாதனை படைத்துள்ளனர்.

கூடங்குளம் அருகே உள்ள காவல் கிணறு பகுதியில்தான் இதற்கான பணிகள் நடக்கின்றன. எனவே கூடங்குளத்தை ஏவுகணைத் தளமாக மாற்றினால் தமிழ்நாட்டில் இதற்கான தளம் இல்லையே என்ற குறையை நீக்கிவிடலாம்.

மற்றொரு கேள்வியையும் கேட்க வேண்டியிருக்கிறது. பார்ப்பனர்கள், பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.காரர்கள், பெரும் நிதியை செலவிட்ட திட்டத்தை முடக்கலாமா என்று கேட்பவர்கள், சேது சமுத்திரத் திட்டத்துக்கு பல கோடி ரூபாய் செலவிட்ட பிறகும், ‘புராணத்தை’க் காட்டி, ‘ராமன்’ கட்டிய பாலத்தை தகர்க்கக் கூடாது என்று கூறி எதிர்த்து தடுத்து நிறுத்தியிருக்கிறார்களே, இது மட்டும் நியாயமா?

- நாகர்கோயிலில் செய்தியாளர்கள் பேட்டியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி (5.11.2011)

**அடுத்த இதழ்....**

**கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு சிறப்பிதழாக வெளி வருகிறது.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th November 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.